Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 29-5-1948 சனிக்கிழமை மலர் 38.

அறிவற்ற கொள்கை !

“சிட்டன்”

காலத்தின் முதல் பிறந்த
கடவுள் என்பார்—அதைக்
கண்டீரோ என்றாலே
தெரியா தென்பார்
கோலத்தின் கூற்றுதனை
என்னே என்பேன்—அனு
கூலத்தில் கண்டதை நான்
கூறுகின்றேன்.

அழைத்திடுவார் சபைதனிலே கடவுள் பேரை
ஆங்காரம் வந்திங்கே ஆடுதென்பார்.

முகக்குறியால் பதிலுரைப்பார் முன்னிற்போர்க்கு
மூடரைப் போல் அதை அவர்கள் நம்பா—
[விட்டால்!

இழைத்திடுவேன் தீங்குனக்கு என்றே சற்று,
எடுத்திடுவார் கையிலுள்ள சாம்பல் தன்னை.

அடுத்த கணம் விழுந்திடுவார் அவர்கால் தன்னில்
அறிவற்ற கொள்கையிது அந்தோ காண்பீர்!

க. சன்ன
பொத்தனூர்,
வேலூர் - சேலம்

1948			JUNE.			1948
SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

பெண்கள் பகுதி:

அந்த நாளும் வந்திடாதோ!

"தோழியர் லட்சுமி"

ஜார் ஆட்சியில் அடிமைகளாகித் துன்பப்பட்டவர்கள் தொழிலாளிகள், உழவர்கள், மாணவர்கள் மட்டுமல்ல! மாதர்களும் கூடத்தான் என்பதற்குக்கீழ்க்கூறப்படும் விளக்கங்களே சான்றாகும்.

சட்டப்படி பெண்களுக்குச் சொத்துரிமை, மற்ற எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்டு பரிதபிக்கத்தக்க நிலையில் இருந்தனர். கணவன் கட்டளையின்றிப் பெண்கள் எந்தச் செயலிலும் இறங்கக் கூடாது. கணவன் மார்களின் கைப்பாவைகளாக இருந்தனர் பெண்கள். அரசியல் சட்டங்களும், மூடக் கொள்கைகளும் பெண்களை அதல பாதாளத்தில் அமுக்கி விட்டன. இளம் வயதிலேயே பெண்களுக்கு மணம் செய்து விடுவார்கள். தங்களுடைய மணப்பேச்சில் பெண்களுக்கு யாதொரு உரிமையும் கிடையாது. பெண்களை விற்கவும்—வாங்கவும் ஆண்களுக்கு அதிகாரமுண்டு. பெண்களைத் திரைமறைவில் மறைத்து வாழவைத்தனர். அன்றாடம் அலுப்பின்றி அடுப்பு வேலைகளைச் செய்து, ஆண்கள் உண்ட மிகுதியை உண்டு அஞ்சி வாழ்ந்தனர் அன்றைய ருஷ்யப் பெண்கள். அநியாயம்!

ரஷ்யப் புரட்சி மூண்டது, மக்களை மானத்தோடு வாழவைக்க. சமூகத்தின் பாதிப்பேர்களான பெண்கள் அடுப்படியில் அழுது கிடக்கும்போது, குடியரசு அமைப்பு அர்த்த மற்றது என்று அழுத்தமாகக் கூறினார் புரட்சி வீரர் லெனின். அவருடைய அறிவுரையை உண்மைப் படுத்தினர் சோவியத் பெண்டிர். புரட்சியை நடத்தப் புகுந்தனர் பெண்கள். ஒற்றர்களாயிருந்தனர். வெடிகுண்டு வீசினர். கொடுங்கோல் ஆட்சியைக் கவிழ்க்கச் சதிசெய்தனர். சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். சிறைசென்றனர். ஆனவக் காரரிடம் அகப்பட்டு அல்லல் பட்டனர். ஆட்சியாளரின் கையில் சிக்கி உயிர் துறந்தனர். இப்படியாகக் கோடிக் கணக்கான பெண்கள் தங்கள் உயிரைக் கொடுத்து உரிமையைப்பெற முன் வந்தனர்.

ரஷ்யப் புரட்சி அனைவருடைய அடிமை விலங்கையும் அறுத்தெறிந்தது. சரித்திர ஏட்டில் பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்க முறையில் ருஷ்யப் பெண்ணுலகு தழைத்தது. புரட்சிக்குப்பின் அரசாங்கத் துறைகளிலிருந்து மற்றெல்லாத் துறைகளிலும், ஆண்களுடன் பெண்கள் ஒத்த உரிமையுடன் வாழமுடிந்தது. பெண்களுக்கு 'ஓட்' உரிமை உண்டு. அரசாங்க சபைகளில் அநேக பெண்கள் அலுவல் செய்து வருகின்றனர். உயர்தரக் கல்வி கற்பவர்களில் நூற்றுக்கு அய்ம்பதுபேர் பெண்களே! பெண்களால் செய்ய முடியாத வேலைகளில் அவர்களை நிர்ப்பந்தப் படுத்தவில்லை. அதற்காக அவ்வேலைகளில் பெண்கள் அமராமல் இல்லை. எத்தகைய கடுமையான வேலைகளையும் குறித்த நேரத்திற்கு முன் திருப்திகரமாகச் செய்து முடித்தனர் வீர மகளிர். இயந்திர விற்பனர்களாகவும்—என்ஜினீயர்களாகவும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் அமர்ந்துள்ளனர். ரயில் ஓட்டுபவர், விமானம் ஓட்டுபவர், ரயில்வே என்ஜினீயர்களாகவும், பெரும் சந்திப்பு நிலையங்களில் ஸ்டேசன் மாஸ்டர்களாகவும், விஞ்ஞானிகள், டாக்டர்கள், பண்ணைப்பாதுகாப்பாளர்களாகவும், ஆலை மேற்பார்வையாளர்களாகவும், இன்னும் பல தொழில்களிலும் ஆண்களோடு பெண்கள் போட்டியிட்டுக் கொண்டு முன்னேறி விட்டனர்.

மற்றையத் துறைகளில் பெண்கள் ஈடுபட்டு விட்டதால் அவர்களுடைய வாழ்க்கை வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்குமென்று சிலர் எண்ணலாம். சமத்துவம் அடைந்து விட்டதால் அவர்களுடைய வாழ்க்கை முன்னையதைவிட மலர்ச்சி அடைந்துள்ளதென்பதை யாரும் மறக்க முடியாது. கூட்டு உணவுச்சாலை (சோற்றுக்கடைகள்) இருப்பதால் உணவுப் பிரச்னையை—சமையல் வேலையைப் பெண்களின் தலையில் அமர்த்த முடியாமற் போய்விடுகிறது. குழந்தைகள் பராமரிப்புக் கழகங்கள் வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டு போவதால் குழந்தைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பும் பெண்களுக்கு இல்லாமல் போய்விடுகிறது. இதனால் பெண்களுடைய வாழ்க்கை வெகு உல்லாசமாகக் கழிகிறது.

பெண்களுக்கு வேண்டிய வசதிகளை அமைத்துத் தருவதில் சோவியத் அரசாங்கம் மிக மிகக் கவனம் செலுத்துகிறது.

மனமொத்த மணம், விவாக ரத்துரிமை, ஆண், பெண் இருபாலருக்கும் உண்டு. லெனின் புரட்சியால் உலகம் இதுகாறும் கண்டிராத முறையில் ருஷ்யப் பெண்கள் முன்னேறி விட்டனர்.

ஜார் ஆட்சியில் ருஷ்யப் பெண்கள் எப்படி அடிமைகளாக வாழ்ந்தார்களோ அதே நிலைதான் இன்றையத் திராவிடப்பெண்களுக்கும். அன்று காட்டுமிராண்டிக் காலம்! இன்று நாகரீகம் முதிர்ச்சி அடைந்த காலம். இடையில் பல ஆண்டுகள் ஓடிவிட்டன. அன்றையிலிருந்து இன்றைய வரைக்கும் ஏதாவது ஒரு துறையில் முன்னேறி இருக்கிறோமா? எழுதவே கூசுகிறது! புராணங்களைப் படிப்பதிலும், காலந் தவறாமல் கடவுள் வழிபாட்டிற்குக் கோவிலை நோக்கி ஓடுவதிலும், பஜனை பாடுவதிலும் காலத்தை வீணாகக் கழிக்கிறோம். வெட்கம்! வெட்கம்!! கண்டதற்கெல்லாம் கடவுள்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நம் அறிவைக் கொண்டு எதையும் சிந்திக்க முடியாதவர்களாகியிருக்கிறோம். அந்தக் கற்கடவுளாவது கண்ணைத் திறந்து பார்த்து நம் குறையைப் போக்கினாரா? எப்படிப் போக்குவார்! சிலைக்குள் கடவுள் என்பவர் புகுந்து கொண்டிருந்தால்தானே? அதற்கொரு உபாயத்தைக் கூறினார் ஆரியர். "பக்தர்களைச் சோதிப்பது பகவான் லீலைகளில் ஒன்று" என்கின்றனர். எப்படி ஏமாற்று வித்தை! இதே சமயத்தில் அணுசக்தியால் மக்களுக்கு வேண்டிய அத்தனை சாதனங்களையும் அடைய முயற்சிக்கிறது மற்றைய நாடுகள். விவசாயத்திற்கு வேண்டிய சிறந்த முறையை அணுசக்தியால் பெறுகின்றனர். வைத்தியத்திற்கு வேண்

[தொடர்ச்சி 16ம் பக்கம்]

கண்ணை மூடிப் பின்பற்றினால்தான் கழகம் உருவான வேலை செய்ய முடியும்.

பெரியார் அவர்களின் தலைமை முடிவுரை.

★

குறிப்பு:— தலைமைப் பேருரையாக முன்பு வெளிவந்தவை புத்தக வடிவில் வெளிவந்ததாகும். அப்பேருரைக்கு இடையேயும், மாநாட்டின் முடிவிலும் பெரியார் அவர்கள் பேசியவற்றை இங்கு தரப்படுகின்றது.

★

பெரியோர்களே! தோழர்களே! தாய்மார்களே!

தூத்துக்குடியில் மாநாடு நடத்த இவ்வூர்த் தோழர்கள் அநுமதி கோரிய போது இவ்வளவு பெரியகூட்டம் இங்கு கூடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்தப் பஞ்சகாலத்தில் இவ்வளவு தொலைவில் நடத்தப்படும் மாநாட்டிற்கு வெகு சொற்ப நபர்களே வரக்கூடும் என்றும், மாநாடு ஏதோ ஒரு சடங்குமுறை மாநாடாகவே இருக்கக்கூடும் என்றும் பலர் நினைத்திருந்தனர். ஆனால் இதுவரையில் நம் கழகத்தின் சார்பாக நடைபெற்ற கடற்கரைக்கூட்டகள் தவிர்த்த வேறெந்தக்கூட்டத்திற்கோ, மாநாட்டிற்கோ இவ்வளவுபேர் எப்போதுமே கூடியதில்லை. இந்தியாவிலேயே கூட ஒரு வேளை அகில இந்தியக்காங்கிரஸ் மாநாட்டுக் கூட்டங்கள்தான் இவ்வளவு பெரியதாக இருக்கக் கூடுமோ என்னவோ அறியேன். அதுவும் இவ்வளவு உற்சாகத்தோடும், துடிதுடிக்கும் ஆர்வத்தோடும், பத்தாயிரக்கணக்கில்தாய்மார்களும், இளைஞர்களும், தோழர்களும் கூடியிருக்கும் இப்பெரிய ஜன சமுத்திரத்தைப்பார்க்கும்போது நான் உள்ளபடியே மிக மிக மகிழ்ச்சியடைகிறேன். ரயில் தொந்தரவால் பல ஆயிரக்கணக்கான மக்கள் வர இயலாமல் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுங்கூட இவ்வளவு பேர் கூடியிருப்பது, அதுவும் எவ்வித அசௌகரியக் குறிப்போ ஏமாற்றுக்குறிப்போ இல்லாமல் மகிழ்வுடன் கூடியிருப்பது எனக்குக் கண்கொள்ளாக்காட்சியாகவே இருக்கிறது. பிரும்மாண்ட உற்சவங்கள் தவிர்த்த மற்ற இடங்களுக்கு இதுவே ரிக்கார்ட் என்றுகூடக் கூறலாம்.

குரல் உள்ளவரை பேசவேண்டும்!

நாதசுரக் குழாயாய் இருந்தால் ஊதியாகவேண்டும், தவுலாயிருந்தால் அடிபட்டுத்தானாகவேண்டும் என்பது போல், எனக்குத் தொண்டை, குரல், உள்ளவரையில் பேசியாகவேண்டும், பிரசங்கம் செய்தாகவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், இவ்வளவு பெரிய கூட்டத்தைக்காண்பதால் ஏற்பட்டுள்ள உள் பூரிப்பும், ஒரு தனியான அகம்பாவமும் என் உள்ளம் பூராவையும் கவர்ந்து நிற்கிறது. இருந்தாலும் முயற்சித்து ஏதோ சொல்லுகிறேன்.

சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில புரட்சிகரமான தீர்மானங்களால் சர்க்கார் சம்பந்தம்நீங்கப்பெற்று, கழகத்தின் பேரும் மாற்றம் அடைந்து திராவிடநாடு பிரிவினையும் லக்ஷியமாக்கப்பட்டதிலிருந்து நமது செல்வாக்கு அனுதினமும் பெருகிக்கொண்டே வருகிறது. இதைக்காணும் சில பொறாமைக் காரர்களும், மேதாவிகள் என்று தம்மை நினைத்துக் கொண்டிருக்கும் சில புத்திசாலிகளும் நம்மீது ஏதேதோ குற்றங்குறை கூறிவருகிறார்கள். நம் கழகத்தைப் பின்பற்றி நடந்து வருபவர்களை இவர்கள் பைத்தியக்காரர்கள் என்றுகூடக் கருதி வருகிறார்கள்.

புத்திசாலிகள் அல்ல! பொறுப்பான லட்சியப் போர்வீரர்களே வேண்டும்!

என்னைப் பொறுத்த வரையில், என்னைப் பின்பற்றி நடந்து வருபவர்கள் புத்திசாலிகளாய் இருக்க வேண்டுமென்ற கவலை எனக்கு ஒரு சிறிதும் கிடையாது. தங்கள் அறிவை, ஆற்றலை மறந்து, என் லக்ஷியத்தை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய ஆட்கள் தான் எனக்குத் தேவையே ஒழிய, அவர்கள் புத்திசாலிகளா, முட்டாள்களா, பைத்தியக்காரர்களா, கெட்டிக்காரர்களா? என்பதுபற்றி எனக்குக் கவலை இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மதிப்பிற்குரிய நண்பர் மாணிக்கநாயகர் அவர்கள் கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது. அவர் ஈரோட்டில் எக்ஸிக்யூடிவ் என்ஜினீயராய் இருந்த போது அவர் எங்கள் வீட்டில் குடியிருந்தார். மாடுகளுக்குச் சுலபமாய் இழுக்கக் கூடிய புது மாதிரியான கவலை ஒன்று செய்யத் தனக்கு இரண்டு கொல்லர்களைத் தருவித்துக் கொடுக்கும்படி சொன்னார், நான் யோசித்து இரண்டு கெட்டிக்காரக் கொல்லர்களின் அதாவது துப்பாக்கி செய்யக் கூடியவர்கள் பெயரைக் குறிப்பிட்டு அவர்களை அழைத்து வரும்படி என் காரியஸ்தர்களுக்குக் கூறினேன்.

அப்போது அவர்சொன்னார். கொல்லன்—கெட்டிக்காரன் என்பவர்களை அனுப்பி வைப்பாயானால் அவர்கள் இருவருக்குள்ளும்கெட்டிக்காரத்தனப் போட்டி வேலையைக் கெடுத்துவிடும், அவர்களே எனக்கு யோசனை சொல்ல முந்துவார்கள், என் திட்டம் ஆட்டம் கொடுத்து வேலை நடவாது. ஆகவே நான் சொல்வதைப் புரிந்து கொண்டு அதன்படி வேலை செய்யக் கூடிய, ஒரு படிமானமுள்ள சொன்னபடி நடக்கக்கூடிய, இரண்டு சம்மட்டியும் சுத்தியும் பிடித்துப் பழகிய ஆளை அனுப்பிவைத்தால் போதுமானது. அவர்கள் முட்டாள்களாயிருந்தாலும் சரி; அவர்களைக் கொண்டு சுலப.த்தில் வேலையை முடித்துக்கொள்ளலாம்'' என்று கூறினார்.

புத்திசாலிகள் சண்டையிட்டுக் கொள்வது எப்போதுமே இயற்கைதான். ஆகவேதான் நான் நீடாமங்கலம் மாநாட்டின் போதே மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் சொந்தப் பகுத்தறிவைக் கூட கொஞ்சம் தியாகம் செய்யவேண்டுமென்று. யாராவது ஒருத்தன் தான் நடத்தக்கூடியவனாக இருக்க முடியுமே தவிர எல்லோருமே தலைவர்களாக இருக்க முடியாது. மற்றவர்கள் தலைவர் இட்ட கட்டளைப்படி நடக்கவேண்டியவர்கள்தான். தோழர்களே நான் இப்போது கூறுகிறேன். நீடாமங்கலத்தைவிட ஒரு படிமேல் செல்லுகிறேன்.

சேருமுன்பு சிந்திப்பீர்! சேர்ந்த பிறகோ அதை மறப்பீர்!

நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை உங்கள் சொந்தப் பகுத்தறிவை மட்டுமல்ல, உங்கள் மனச்சாட்சி என்பதைக்கூட நீங்கள் கொஞ்சம் மூட்டை கட்டி வைத்துவிடவேண்டியதுதான். கழகத்தில் சேருமுன்பு

ரோஜா முத்தையா

இந்தச் சர்வாதிகாரம் எதற்குப் பயன்படுகிறது?

★

நீங்கள் உங்கள் பகுத்றிவு கொண்டு கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம்! என்னுடன் வாதாடலாம். உங்கள் மனச்சாட்சி என்ன கூறுகிறது என்று நீங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆர அமர இருந்து யோசித்துப் பார்க்கலாம்!

ஆனால் எப்போது உங்கள் மனச்சாட்சியும் பகுத்தறிவும் இடங்கொடுத்து, நீங்கள் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களோ அப்போதிலிருந்து உங்கள் பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் ஒருபுறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டுக் கழகக் கோட்பாடுகளைக் கண்மூடிப் பின்பற்றி நடக்க வேண்டியதுதான் முறை.

ஒரு எஜமான் வேலைக்காரனைப் பார்த்து 'அந்தப்பெட்டியைக் கொஞ்சம் எடப்பா' என்று கூறினால், 'என் மனச்சாட்சி என்னை அதற்கு அனுமதிக்கவில்லையே? என்று கூறினால் அது முறையாகுமா? ஒரு டிஸ்ட்ரிக்ட் சூப்ரண்டெண்ட் சுடு! என்று போலீஸ்காரனுக்கு உத்தரவு போட, அவன் "என் மனச்சாட்சி அதற்கு இடங்கொடுக்கவில்லையே" என்று கூறினால் அந்தச் சூப்ரண்டெண்ட் கதி என்னாவது? கசாப்புக் கடையில் வேலைபார்க்க ஒப்புக்கொண்டவன் 'அந்த ஆட்டை வெட்டுடா' என்று எஜமான் உத்தரவிடும்போது, "அய்யோ என் மனச்சாட்சி மாட்டேன் என்கிறதே; நான் என்ன செய்யட்டும்?" என்று கூறினால், "எண்டா மடப்பயலே! முன்னாடியே உனக்கு இது தெரியாமற் போனதென்னடா? அப்போது உன் மனச்சாட்சி எங்கேடா போயிருந்தது?" என்று கேட்பானா? இல்லையா அவனை?

குதர்க்கம் பேசுதல் விஷமமல்லவா?

ஆகவே மனச்சாட்சியோ, சொந்தப் பகுத்தறிவோ கழகக் கொள்கையை ஒப்புக் கொள்ள மறுக்குமானால், உடனே விலகிக்கொள்வதுதான் முறையே ஒழிய, உள்ளிருந்து கொண்டே குதர்க்கம் பேசித் திரிவது என்பது விஷமத்தனமே ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிலருக்கு நான் ஏதோ சர்வாதிகாரம் நடத்த முற்படுகிறேன் என்று தோன்றலாம். இது ஓரளவுக்குச் சர்வாதிகாரம்தான் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தோழர்களே! நீங்கள் சிந்திக்க வேண்டும்; "இந்தச் சர்வாதிகாரம் எதற்குப் பயன்படுகிறதென்று?" என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக லட்சியத்தின் வெற்றிக்காக, பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறேனே ஒழிய, எந்தச் சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ, ஒரு கடுகளவாவது எனது சொந்தநன்மைக்காகவோ பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

என் சொந்த விளம்பரத்திற்காக, என் சொந்தப் பெருமைக்காக இதுபோன்ற மாநாடுகள் கூட்டப்படுகின்றன என்று சிலர் கருதுவதற்கொப்ப, இம்மேடையின்கண் பேச நேரும் தோழர்களும் என்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதிலேயே தமது சொற்பொழிவுக்குக்கொடுக்கப்படும் நேரத்தின் பெரும் பகுதியைச் செலவு செய்கின்றார்கள். இதை நான் அறவே வெறுக்கிறேன். சிறிதும் விரும்பவில்லை. ஆகவே, சொற்பொழிவாளர்கள் என்னைப்பற்றிப் புகழ்ந்து பேசாமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இருந்த காந்தியார் வேறு! இறந்த காந்தியார் வேறு!

சென்ற மாநாட்டிற்குப்பின் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் முதன்மையாகப் பேசப்பட வேண்டியது காந்தியாரின் மறைவைக்குறித்தாகும். காந்தியார் உயிரோடிருந்தவரை அவருடைய போக்கைப் பெரும் அளவுக்குக் கண்டித்து வந்த எனக்கு, காந்தியார் மறைவுக்குத் துக்கப்படவோ, அவரது மறைவுக்குப்பின் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசவோ என்ன உரிமையுண்டென்று சிலர் கேட்கலாம். சில காங்கரஸ்காரர்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்ளவே நான் இவ்விதம் சூழ்ச்சி செய்வதாகவும் கருதியிருக்கலாம். ஆனால், தோழர்களே! இவை உண்மையல்ல. காந்தியார் மறைவுக்கு ஆக எந்தக் காங்கரஸ்காரர் துக்கப்பட்டார்? அழுதார்? வேதனைப் பட்டார்கள்? காங்கரஸ்காரர்கள் பண்டிகை கொண்டாடினார்கள். காங்கரஸ் முக்கியஸ்தர்களாக இருந்த பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கினார்கள். எனக்கு உண்மையிலேயே இப்பொழுதும் துக்கம் மேலிடுகிறது.

காந்தியாரின் மறைவுக்கு அநுதாபப்பட, மற்றவர்களைக் காட்டிலும் அதிகத் துக்கப்பட வேறுபல காரணங்கள் உண்டு. முதலாவதாகக் காங்கரஸ்காரர்கள் பலரும் பார்ப்பனர்களும் கருதி இருந்த காந்தியார் வேறு, இறந்த காந்தியார் வேறு என்று நான் கருதுகிறேன்,

இருந்த காந்தியார் ஆரியக்காந்தியார்! ஆரியரால் உண்டாக்கப்பட்ட காந்தியார். நம் எதிரிகளின் காந்தியார். ஆனால் இறந்த காந்தியார் நம் காந்தியார். ஆரியம் அழிந்துவிடுமே எனப் பயந்து ஆரியரால் கொல்லப்பட்ட கொலையுண்ட காந்தியார். அதனால்தான் நாம் மற்றவர்களுக்கும் மேலாகத் துக்கப்படுகிறோம். அதனால்தான், மற்றவர்களைவிட நமக்குத்தான், அவர் மறைவுக்காகத் துக்கப்படவும் உரிமையுண்டு என்றும் கூறிக்கொள்கிறோம். ஒருவர் தம்மறைவுக் காலத்தில் எந்த நிலையில் இருக்கிறாரோ, அதைப் பொறுத்துத்தான் அவருடைய மறைவுக்குத் துக்கப்படுபவர்களும், சந்தோஷப்படுபவர்களும் அமைவார்கள். உதாரணமாக நான் காங்கரஸ் ராமசாமியாக ஒரு காலத்திலும், சுயமரியாதை ராமசாமியாக ஒரு காலத்திலும், திராவிடக் கழக ராமசாமியாகத் தற்காலத்திலும் இருந்து வருகிறேன். காங்கரஸ் ராமசாமியாக இருந்த காலத்தில் நான் இறந்திருந்தால் "சுதேசமித்திரன்" ஆசிரியர் உள்பட, "ஹிந்து" ஆசிரியர் உள்பட பல காங்கரஸ்காரர்களும் அய்யர் அய்யங்கார்களும் துக்கங்கொண்டாடியிருப்பார்கள். சுயமரியாதை ராமசாமியாக இறந்திருந்தால் சுயமரியாதைக் காரர்களும் மற்றும் சில அறிவாளிகளும் மட்டும் துக்கம் கொண்டாடியிருப்பார்கள். ஒரு சில சுயமரியாதைக்காரப் பார்ப்பனர் தவிர்த்த மற்றப் பார்ப்பனர்கள், வைதீகர்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டிருப்பார்கள்.

இருந்தவர் ஆரியக் காந்தியார் இறந்தவர் திராவிடக் காந்தியார்.

ஆனால் இன்று மறையநேர்ந்தாலோ திராவிடர்கள் அனைவரும் துக்கங் கொண்டாடலாம் என்று கருதுகிறேன். இதே போல் காந்தியாரும் தம் மறைவின்போது திராவிடக் கழகக் கொள்கைகளை ஒப்புக்கொண்ட காந்தியாராகத்தான் மறைந்தாரே ஒழிய, ஆரிய தர்மத்தை ஒப்புக்கொண்ட காந்தியாராக மறையவில்லை. ஹிந்து மத தர்ம அநீதியைக்கண்டிக்கப்புகுந்ததால் அதற்கான பலனையடைந்தார். "சூத்திரன் தலை எடுத்தால் பார்ப்பானுக்கு ஆபத்து" என்ற மனுதர்ம விதிப்படி அவர் பார்ப்பனனால் கொல்லப்பட்டார். இராமாயணக் காதையில் சம்பூகன் அடைந்த கதியை அவர் அடைந்தார். சம்பூகன் கொல்லப்பட்டதற்கு ஆரியப் பார்ப்பனர்கள் அகமகிழ்ந்ததாக, இறந்த பார்ப்பனர்களெல்லாம் உயிர்த்தெழுந்ததாக, கதையில் காணப்படுகிறது. காந்தியார் கொல்லப்பட்டதற்குப் பார்ப்பனர்கள் மிட்டாய் வழங்கியதை நாம் நேராகப் பார்த்தோம். காந்தியார் மறைவுக்குப் பார்ப்பனர்களே காரணம் என்று வடநாட்டில்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

"வ. உ. சி. கப்பல்"

"புத்ததாசன்"

★

நாட்டில் வெள்ளைக்காரன் ஆட்சி நடத்தியபொழுது, அவர்களிடமிருந்து நாட்டு விடுதலையையும், உரிமையையும் பெறவேண்டும் என்ற நாட்டம் கொண்டிருந்தவர்களில் தலைசிறந்த மாவீரர் வ. உ. சிதம்பரனார் அவர்கள். கடலில் கப்பலோட்டும் உரிமையைச் சட்டத்தின் மூலம் வெள்ளையரின் கம்பெனிகள் ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு கொள்ளையடித்துக் கொண்டிருந்த பொழுது அதை எதிர்த்து, இந் நாட்டவர்களுக்கும் கப்பலோட்டும் உரிமை வேண்டுமென்றுகூறி, சொந்தக் கப்பல் ஓட்டினார் சிதம்பரம் பிள்ளை. இந்திய உபகண்டத்திலேயே வெள்ளை ஆட்சியை எதிர்த்துக் கப்பலோட்டிய பெருமையும், வீரமும் சிதம்பரனாருக்கும் அவர் பிறந்த திராவிட நாட்டிற்கும் தான் உரியது!

அவர் சிறையை சிங்காரச் சோலையாகக் கருதினார். துன்பத்தை வீணையின் நாதமென்று ஏற்றுக்கொண்டார். அவர் தனது வாழ் நாளில் இந்திய உபகண்டத்தின் மக்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் போராடினார். தனது கனவும், லட்சியமும் நிறைவேறுமுன் இறந்துபோனார்.

வ. உ. சி. எந்த உபகண்டத்து மக்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் எந்தக் கட்சியிலிருந்து போராடினாரோ அந்தக் கட்சி இன்று நாட்டின் அரசியலை ஏற்று நடத்தும் வாய்ப்புப் பெற்றிருக்கிறது. அவர் விரும்பிய உரிமையும் விடுதலையும் இன்று ஓரளவு கிடைத்திருக்கிறது. இந்தியா சுதந்தர மடைந்து விட்டது என்று கூறிக்கொண்டு ஆட்சிப் பீடத்தில் கொலு வீற்றிருக்கும் காங்கரஸ் கட்சியினர், சுதந்தர இந்தியாவின் முதல் கப்பலும் ஓட்டிவிட்டார்கள். இவ்விழாவைப் பிரதமர் நேரு அவர்கள் வேதபாராயண முழக்கத்துடன் ஆரம்பித்து வைத்தார். இந்திய உபகண்டத்து மக்களுக்குக் கப்பலோட்டும் உரிமை வேண்டும் என்பதற்காகப்போராடி வெள்ளைச்சர்க்காரை எதிர்த்துக், கப்பலோட்டிய குற்றத்திற்காக சிறைசென்று, சொத்திழந்து, உயிர்துறந்த சிதம்பரனார் இன்று இல்லை. ஆனால், அவர் எந்த உரிமைக்காகப் போராடினாரோ, அந்த உரிமையைப் பெற்று அதன் பயனை அனுபவிக்க ஆரம்பிக்கும் பொழுது, அவருக்குச் செய்யவேண்டிய மரியாதையும், கொடுக்கப்படவேண்டிய கௌரவமும் அளிக்கப்படவில்லை. ஏன்? அவரைப்பற்றிய நினைவுகூட இங்கு யாருக்கும் ஏற்படவில்லை. இது காங்கரஸ் திராவிடர்களுக்கும், சிதம்பரனாருக்கும் செய்த அநீதிமட்டுமல்ல! துரோகமும் கூடத்தான். இதைத் தூக்கு மேடையில் நின்றும் கூறத் தயங்கமாட்டேன்.

வ. உ. சி. ஒரு திராவிடர் என்ற காரணத்தினால்தான், அவருக்குக் கிடைக்கவேண்டிய மரியாதையும், பெருமையும் கிடைக்கவில்லை. இதுமட்டுமல்ல, அவர் பார்ப்பான்களின் பகட்டு வேசங்களைச் சாடினார். பார்ப்பனீயத்தைக் கண்டித்தார். பார்ப்பான்களின் அநீதி மிக்க செயல்களையும், திராவிடச் சமுதாயச் சேவையில் அவர்கள் பாய்ச்சிவரும் விஷநீர் ஓடைகளையும், பகுத்தறிவு அணைபோட்டுத் தடுத்துவரும் பெரியாரைப் பெருமைப்படுத்தியும் ஆதரித்தும் பேசியும் வந்தார். ஆகையால்தான் அவருடைய தியாகத்தையும், விடுதலை வேட்கையையும் வடநாடும் ஏன், தென்னாடும் கூடத்தான் தெரிந்து கொள்ள முடியாது செய்து விட்டது பார்ப்பனீயம். ஆகஸ்ட் துரோகி என்று காங்கரஸ் திராவிடர்களால் தீர்ப்புக் கூறப்பட்ட ஆச்சாரியாரின் உருவப் படம், சென்னைச் சட்டசபையில் திறந்து வைக்கப்பட்டது. பூண்டி நீர்த்தேக்கத்தைச் சத்தியமூர்த்தி சாகரம் எனப்பெயர் மாற்ற எவரும் முயற்சி எடுத்துக்கொண்டார்கள். பார்ப்பனக்கவி பாரதிக்கு பளிங்கு மண்டபம் கட்டப்பட்டது. ஆனால், கப்பலோட்டிய தமிழன் (திராவிடன்) வ. உ. சிதம்பரனாருக்கு எங்கும் படத்திறப்பு விழா நடத்தப்படவில்லை. அந்த வீரத்தமிழன் பெயரால் ஒரு சிறு கட்டிடம் கூடக் கட்டப்படவில்லை. ஏரி—குளத்திற்குக்கூட அவருடைய பெயர் வைக்க எந்தப் பார்ப்பானும் முன்வரவில்லை. ஏன்? அவர் ஒரு திராவிடன் என்பதுதானே காரணம்.

வ. உ. சியின் தியாகமும், உழைப்பும் எந்தக் காங்கரஸ்காரர்களுடைய உழைப்பிற்கும், தியாகத்திற்கும் சற்றும் குறைந்ததில்லை. பின் ஏன் அவரைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை? ஒன்றும் பயனற்ற உதவாக்கரைப் பார்ப்பான்களுக்கெல்லாம் மண்டபமும் படத்திறப்பும் நடைபெறுகிறது. இதுதான் பார்ப்பானுக்கு இருக்கும் இனப்பற்று. இதைக் காங்கரஸ் திராவிடத் தோழர்கள் உணர முடியாதபடி தேசியம் என்ற போதைதரும் மயக்க மருந்து ஊட்டப்பட்டிருக்கிறது பார்ப்பனர்களால். மயக்கம்தெளிந்து உணர்வு பெறும் பொழுது உண்மையை உணர்ந்து கொள்வார்கள். இப்பொழுது இரண்டொரு காங்கரஸ் திராவிடத் தலைவர்கள் உணர்ந்திருந்தாலும், வெளிப்படையாகச் சொல்லுவதற்கு அஞ்சுகிறார்கள். காரணம், இதை வெளியில் சொன்னால் வகுப்புத் துவேஷக் குற்றம் சாட்டப்பட்டு, அரசியல் விதவையாக்கப்பட்டு, அந்தப்புரத்திற்கு அனுப்பப்பட்டு விடுவோமோ என்கிற பயந்தான்.

காங்கரஸ் திராவிடத் தோழர்களைச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பூண்டிநீர் தேக்கத்தைச் சத்தியமூர்த்தி சாகரமாகப் பெயர் மாற்றுவதற்கும், பார்ப்பனக் கவி பாரதிக்குப் பளிங்கு மண்டபம் கட்டுவதற்கும் முயற்சி எடுத்துக் கொண்ட பார்ப்பனர்கள், ஏன் வ. உ. சிக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை? பார்ப்பான்கள் எந்தக் காங்கரஸ் திராவிடத் தலைவர்களுக்கும் நன்றியோ, மரியாதையோ செலுத்தவும் மாட்டார்கள்! இதுவரை செய்ததுமில்லை! இனி செய்யப் போவதுமில்லை! பார்ப்பான்கள் "எல்லோரும் ஓர் நாட்டு மக்கள், எல்லோரும் இந்தியத் தாயின் குழந்தைகள்" என்றெல்லாம் பேசுவார்கள்! ஆனால், பார்ப்பான் பார்ப்பனைத்தான் முன்னுக்குக் கொண்டு வந்து பெருமையும், புகழும் தேடிக்கொடுப்பான். பார்ப்பானுக்குப் பார்ப்பான் மேல்தான் பற்று

தனும், அன்பும் இருக்கும்! இது அவர்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள இனப்பற்று!

எனது அருமைக் காங்கரஸ் திராவிடத் தோழர்களே! காங்கரஸ் பார்ப்பனர்களையும், வடநாட்டுப் பனியாக் கூட்டத்தையும் விளம்பரப்படுத்திக் கொள்ளவும், கூட்டுக் கொள்ளையடிக்கவும் உள்ள ஒரு கட்சியாக மட்டும் இல்லாமல், உண்மையான பொதுமக்மள் கட்சியாக இருக்குமானால், சுதந்தர இந்திய சர்க்காரால் ஒட்டப்பட்ட முதல் கப்பலுக்கு வ. உ. சி. கப்பல் என்றல்லவா பெயர் வைத்திருக்க வேண்டும்? அப்படிப் பெயர் வைத்திருக்கப்படுமானால் அந்தக் கப்பலைக் காணும் பிற நாட்டவர்கள் வ. உ. சியைப்பற்றியும், அவர் பிறந்த திராவிடத்தைப் பற்றியும் பெருமைப்படுத்தியே தீருவார்கள். இதிலிருந்து திராவிடர்களின் பெருமையையும், வீரத்தையும் பிறநாட்டவர்கள் தெரிந்து கொள்ள முடியாமல் காங்சரசும், பார்ப்பனர்களும் திரையிட்டு மறைக்கிறார்கள் என்பது நன்கு விளங்குகிறது. இந்த உண்மையை உணரும் பொழுது திராவிடர்களின் உள்ளத்தில் வேதனையையும், ஏக்கத்தையும்தான் காண முடியும்! இந்த நிலைக்குப் பிறகுதான் அவன் உள்ளத்தில் ஒரு புதுமை உண்டாகும்! இதற்குப் பிறகுதான் தன்னை வஞ்சித்து வந்த எந்தக் கூட்டத்தையும் ஒழிக்க முன்வருவான்.

ஒன்று மட்டும் உறுதியாக கூறுகிறேன். திராவிடம் வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரிந்து தனிச் சுதந்தரக் குடியரசாக அமையாத வரையில், வ. உ. சி. மட்டுமல்ல இன்னும் எத்தனை ஆயிரம் வீரர்களும் தியாகிகளும் தோன்றினாலும் அவர்களைப் பிற நாடுகள் அறிந்துகொள்ள முடியாமல், பார்பனக் கூட்டத்தால் இருட்டடிப்புச் செய்யப்பட்டுத்தான் போகும். திராவிடம் சிறந்த நாகரீகங்களையும், உயரிய பண்புகளையும், சிறந்தபல கலைகளையும், வீரத்தையும் பெற்றிருந்த போதிலும் உலகிற்கு அடிமை நாடாகத்தான் தோற்றமளித்துக்கொண்டிருக்கும். "திராவிடம் என்றொரு நாடு இருக்கிறது, அந்த நாட்டு மக்கள் நம்மைவிட ஒழுக்கம், நாகரீகம், கலைத்திறன் முதலியவற்றில் சிறந்து விளங்கும் வீரர்கள்" என்று பிற நாட்டவர்கள் பேசிக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட வேண்டுமானால் திராவிடம் தனிச்சுதந்தரக் குடியரசாகப் பிரிந்தால்தான் முடியும்.

1948 மே மாதம் 8, 9 தேதிகளில் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர்கழக 18-வது மாகாண மாநாட்டில் "கப்பலோட்டிய தமிழன்" வ. உ. சிதம்பரனாரின் படத்தை திறந்து வைத்தோம். இதில் வியப்பேதுமில்லை. இன்னும் சில ஆண்டுகளில் தூத்துக்குடி துறைமுகத்தில் சுதந்தரத் திராவிடக்குடியரசுச் சர்க்காரின் முதல் கப்பலோட்டும் விழாவைத் தலைவர் பெரியார் அவர்கள் நடத்திவைப்பார்கள்! அந்தக்கப்பலின் கொடிக் கம்பத்தில் சுதந்தர திராவிடக் குடியரசின் கொடி பறந்து கொண்டிருக்கும்! அந்தக் கப்பலின் முகப்பில் "வ. உ. சி. கப்பல்" என்ற பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு, வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கும்! இது எதிர்காலத்தில் நடக்கப்போகும் உண்மை! சந்தேகமிருந்தால் கல்லில் செதுக்கி வைத்துக் கொள்ளுங்கள்!

நீங்கள் செய்யும் கைமாறு ஒன்றே ஒன்றுதான்.

"கே. வி. கே. சாமி"

★

தூத்துக்குடியில் மே 8, 9, 48ல், நடைபெற்ற மாகாண மாநாடு நல்ல ஏற்பாடுகளுடனும், நிர்வாகத் திறமையுடனும், அதுவும், திராவிட நாட்டுச் சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அளவுக்கு மிகச் சிறந்த முறையில் நடத்திவிட்டதாகப் புகழ்ந்து, மனமகிழ்ச்சி அடைவதாகவும், அதற்கு என்ன கைம்மாறு செய்வதென்றே ஒன்றும் புலப்படவில்லை என்றும், பலகழகங்களும், தோழர்களும், தூத்துக்குடி தோழர்களையும், தொண்டர்களையும் போற்றி எழுதிய கடிதங்கள் வந்து குவிந்திருக்கின்றன. இவர்கள் மட்டுமல்ல, பெரியார் அவர்கள்கூட என்னிடம் நேரில் இம்மாநாட்டை இவ்வளவு வெற்றிகரமாக நடத்திய தூத்துக்குடி தோழர்களுக்கு என்ன கைம்மாறு தான் செய்வதென்றே ஒன்றும் புலப்படவில்லை. அவ்வளவு பெரிய உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டது என்று ஆனந்த மிகுதியால் கூறினார்கள். பெரியார் அவர்கள் கைம்மாறு செய்ய என்னதான் பாக்கி இருக்கிறது. உலகத்திலேயே விலை மதிக்க முடியாத பொருள் ஒன்று உண்டென்றால் அது மனிதனுடைய உயிர் ஒன்றை மட்டும் சொல்லலாம். அப்பேர்ப்பட்ட உயிரைவிடப்பெரியது மானம். அந்தமானத்தை இழந்துவாழ்கிற கோடிக்கணக்கான திராவிடப் பெருங்குடி மக்களுக்கு மானத்தோடு, மனிதத் தன்மையோடு வாழவழிகாட்டி அவ்வழியே அழைத்துச் சென்று, வெற்றி கண்டு நம்மை (திராவிடர்களை) வீரமரபினர்களாக்க தன் தள்ளாத வயதிலும், தடியைத் தரையில் ஊன்றி உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும் அர்ப்பணித்து அரும்பாடுபட்டு வருகிறார். இதைவிட பெரியார் அவர்கள் வேறு என்னதான் கைம்மாறு செய்ய வேண்டும். இதைவிட பெரிய கைம்மாறு வேறு எவரால்தான் செய்ய முடியும்? செய்ய முடிந்தது? எனவே தோழர்களே நீங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றே ஒன்றுதான். நீங்கள் விடும் மூச்சு ஒவ்வொன்றும் திராவிடநாடு திராவிடருக்கென்றுஆகி, பெரியார் அவர்களைப் பின்தொடர்ந்து, அவர் இடும் கட்டளைப்படி நடந்து, திராவிட நாடு திராவிடருக்காக, தன்மானத்தோடு வாழ பெரியார் ஆரம்பிக்கப் போகும் போராட்டத்திற்கு ஒவ்வொருவரும் தயாராகிக் கச்சம் கட்டி இருக்க வேண்டும் என்பதுதான். இதற்காகவே எங்கள் உழைப்பு என வாழ்த்துக் கூறிய அனைவருக்கும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வீறுகொண்டு விழித்தெழு.

"ஜகதீசன்"

★

"ஆத்மாவிலிருந்து சுதந்தரத்தையும் நியாய புத்தியையும் பிரித்தெடுத்து விடுகின்ற நூல்கள், உருவங்கள், சட்டங்கள், மதங்கள் முதலிய எல்லாவற்றையுமே தகர்த்தெறியுங்கள்! நம் உள்ளத்திற்கு—உரிமைக்கு விலங்கிடும் முயற்சியைச் சினங்கொண்டு வன்மையுடன் கண்டிப்போமாக!''

'நாஸ்தீக ஈ. வே. ரா. தானே இப்படிச் சொல்கிறார்? இதிலென்ன ஆச்சரிய மிருக்கிறது? எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்ததுதானே' என்று உறுமலாம்,புதுமை விரும்பாப்பழமைப் பித்தர்கள். பிற்போக்குக்கட்டை வண்டியே கதி என்றிருப்போருக்கு முற்போக்கு விமானத்தைக் கண்டால் கதிகலங்கத்தான் செய்யும். இப்பொன் மொழிகள் பெரியார் பேசியதல்ல; இங்கர்சாலின் இடிமுழக்கங்கள். அன்று அமெரிக்க மக்களின் அறியாமையையும், ஒரு சிறு கும்பலின் அட்டூழியங்களையும் கண்டு நெஞ்சு பொறுக்காமல் அவைகளை அகற்றுவதற்காகவே இங்கர்சால் இவ்வாறு வீரமுழக்கம் செய்தான். இன்று திராவிட நாட்டில் மலிந்துள்ள அறியாமை, இழிவு, அநியாயம் முதலியவற்றை முறியடிக்கவே இங்கும் ஒரு இங்கர்சால்-பெரியார் ஈ. வே. ரா. போர் முரசு கொட்டுகிறார். நம் நாட்டுக்கு ஒரு இங்கர்சால் போதாது; ஒவ்வொருவரும் இங்கர்சாலாகவேண்டும். அன்றுதான் தன்மானத் திராவிடன் தனிப்பெருமையுடன் தலைநிமிர்ந்து நடக்க முடியும்.

சில நூல்களுக்குச் சாவுமணியடிக்கக் கூறுகிறோம். ஏன்? பகுத்தறிவுள்ள மக்களையே உயர்ந்தவன், தாழ்ந்தவனெனப் பிரித்து, ஒரு சிறு புரட்டுக் கும்பல் மட்டும் கும்மாளம் கொட்ட, பாமரமக்கள் அறியாமைப் படுகுழியில் தள்ளப்பட்டு தீண்டாமைச் சேற்றிலே உழன்று தவிக்கச் செய்கின்றன, சில "கோட்சே நூல்கள்.'' அதனால்தான் அவைகளைச் சுட்டுப் பொசுக்க வேண்டுமென்று கூறுகிறோம். திராவிட மக்களின் கருவூலமான மானத்தைப் பெரிதும் இழிவு செய்யும் மடமை நூல்களை எரித்துச் சாம்பலாக்குங்கள் என்று எக்காளமிடுகிறோம். உயிரைவிட மானமே பெரிதென்று எண்ணும் திராவிடர்களுக்கு, மானத்தைப் போக்கும் இலக்கியம் துரும்பிலும் துரும்பு. இதையே அன்று பறைசாற்றினான் அறிஞன் இங்கர்சால்.

பாமரமக்களின் பணத்தை அட்டைபோல் உறிஞ்சி, பகுத்தறிவையும் பறித்து, ஏமாளிகளாக்கும் சுயநல அக்ரகாரக் கும்பலுக்கு உடந்தையாயிருக்கும் உருவங்களை உடைத்தெறியுங்களென்று பகுத்தறிவின் பெயரால் கேட்கிறோம். அர்த்தமற்ற மொழிகள் கூறிப் பணத்தைப் பிடுங்கும் உச்சிக் குடுமிகளை ஆதரிக்கும் சிலைகளைச் சிதறடியுங்கள். கடவுளின் பெயரால் பாமரமக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதித்துக் கொழுத்த காலம் மலையேறிவிட்டது என்பதை அந்தக் கும்பல் தெள்ளத் தெளிவாக உணர வேண்டும்; உணர வைக்க வேண்டும்.

"எவனொருவன் எண்ண, எழுத, பேச உரிமை வேண்டுமென்று கூறிக்கொண்டு, அதே உரிமையை மற்றவர்களுக்கு வழங்க மறுக்கிறானோ, அவன் அயோக்கியன்! மிருகத்தன்மை வாய்ந்தவன்!'' இதுவும் இங்கர்சாலின் புரட்சித் தீயிலிருந்து தெரித்த சுடர். இரண்டு ஆண்டுகளுக்குமுன் காஷ்மீரில் கொந்தளிப்பான நேரம். நேரு அங்கு வரக்கூடாது என்பது மன்னர் உத்தரவு. மீறிச் சென்று காவலாளிகளுடன் குஸ்தி போட்டார் நேரு. இந்தியாவில் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் நடந்தன இதற்கு எதிரொலியாக! அன்று அன்னியர் ஆட்சி. இன்று அதே நேரு சர்க்காரிலே தம்கட்சியின் சமூகக் கொள்கைகளை எடுத்துக்கூற, சில இடங்களில் திராவிடத் தலைவருக்குத் தடை உத்தரவு! தீ வைக்கவோ, கொள்ளையடிக்கவோ, கொலை செய்யவோ தூண்டுவதற்குச் செல்லவில்லை. பெரியார். தள்ளாத வயதில், ஆயுதமின்றி வெறுங்கையுடன் தம்கட்சியைப்பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு அவருக்கு உரிமை கிடையாது. தண்டவாளத்தைத் தகர்க்கத்தெரியாது திராவிடத் தியாகிகளுக்கு! தீ வைக்கும் தீவிரவாதிகளுமல்ல! நம் பாமரமக்களையே கொள்ளையடிக்கும் கருணைக் கிழங்குகளல்ல''! இம்மாதிரி 'புரட்சி' செய்யவே தெரியாது. திராவிடத்தின் மீதுள்ள இழிவுக்கு அழிவுதேட, உயர்ந்த ஆக்க வேலைக்கு ஊக்கமுடன் உற்சாகமாகத் தியாகம் செய்பவர்களே திராவிடர்கள். ஆயினும் சாதாரண உரிமைகூட நமக்குக் கிடைப்பதில்லை. 'மக்களாட்சி'யில்! ஏன்? பதவி மதுவினால் மதிமயங்கிக் கிடக்கின்றனரா மதிமந்திரிகள்? நம்மைக் கட்டுப்படுத்தும் சட்டங்களைச் 'சட்டை' பண்ண வேண்டுமா? மதிப்புக் கொடுக்க முடியுமா?

நண்பர்களுக்குப் பதிலாக எதிரிகளையே மதம் சிருஷ்டிக்கிறதென்பது இங்கர்சால் கண்டறிந்த உண்மை. அதனால்தான், மக்களை மாக்களாக்கி அறியாமையை மின்சார வேகத்தில் பரப்பும் மதத்தை—உளுத்துப்போன மதக் கோட்பாடுகளைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டுமென்று முழங்குகிறோம். இப்படிக் கூறினால் ஜாதித் துவேஷம் கொள்வதாக உறுமுகிறது பார்ப்பனக் கும்பல். படித்த பார்ப்பனப் பிரகஸ்பதிகள்கூட ஜாதி விஷம் தலைக்கேறி தலைகால் தெரியாமல் பேசியிருக்கிறார்கள். பிராமண சேவா சங்கம்; அதற்கு அகில உலகப்புகழ் சி. பி. ராமசாமிஅய்யர் தலைவர். இது வகுப்புவாதமல்ல! "அய்யர், அய்யங்கார் என்று தாராளமாக எழுதவேண்டும்; பிராமணர்களுக்கே கடவுள் காட்சி கொடுக்கிறார்'' என்று பார்ப்பனர்கள் கூறினால் அது வகுப்புவாதமல்ல!, இம்மாதிரி வகுப்புவாதங்கள் ஒழிந்து ஒரே மதம் வேண்டுமென்று திராவிடர்கள் கூறினால் வகுப்புவாதம்! ஆதிதிராவிடர்களுடன் கைகுலுக்கினாலும் தம்உள்ளம் மட்டும் குலுங்குவதில்லை—அதாவது அங்கீகரிப்பதில்லை என்று ஆச்சாரியார்—எதிர்கால வைஸ்ராய் கூறினால் ஜாதிப் பித்தல்ல! எல்லோரும் ஒரே மதத்தினர்; எல்லோருக்கும் ஒரே சட்டதிட்டங்கள் என்று பெரியார் கூறினால் அவர் ஒரு மதத்துரோகி! நாஸ்தீக, வெறிபிடித்தவர்! அவருக்கு வாய்ப்பூட்டுச் சட்டங்கள். ஜாதி மதம் ஒழிய வேண்டுமென்று உதட்டளவில் கூறும் தலைவர்கள் இதற்கு என்ன கூறமுடியும்? கப்பல் தண்ணீரில். மிதக்க வேண்டுமானாலும் பார்ப்பன மந்திரம் வேண்டியிருக்கிறது, ஜாதி மதமற்ற சர்க்காரில்! காந்தி மதம் என்று ஒரே மதமிருக்கட்டுமே என்று பெரியார் கூறினால் நேரு சப்தமே காணோம். அந்தப் பேச்சே உதவாதென்கிறார், தமிழ் நாட்டில் உள்ளத்தை வைத்துவிட்டு உடலைக் கல்கத்தாவில் உலவச் செய்யும் ஆச்சாரியார்! காந்தி மதமென்று ஏற்பட்டால் தங்கள் கலாச்சாரம் குழிதோண்டிப் புதைக்கப் பட்டுவிடுமே! சூத்திரன் என்ற பட்டம் பறந்துவிடுமன்றோ! மேலும் ஈ. வே. ரா. யோசனை என்றால் மற்றவர்களுக்குக் கொஞ்சம் திகைப்புத்தான்! நாஸ்தீகரல்லவா? இங்கர்சால் கூறுவதுபோல் மனிதத் தன்மையற்ற ஆஸ்தீகனைவிட மனிதத் தன்மையுள்ள நாஸ்தீகனாக இருக்கவே ஒவ்வொரு திராவிடனும் விரும்புகிறான். பார்ப்பனீயம் பூண்டுடன் புதைக்கப்பட வேண்டுமென்று சங்கநாதம் செய்கிறோம். ஆனால் பதவியும், உயிரும் பெரிதெனக் கொள்ளும் ஆரியர்கள், மானமும் வீரமும் குறிக்கோளாகக் கொண்ட திராவிடர்களின் நெஞ்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

குடி அரசு

29—5—48 சனிக்கிழமை.

விபரீதமான வெடி.

இந்திய உபகண்டத்தில், சென்னை மாகாணம், மற்ற மாகாணங்களிலிருந்தும் எல்லாவகையிலும் வேறுபட்டது என்பதைப் பலவகையாலும் நாம் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். உண்ணும் உணவு, உடுக்கும் உடையிலும் சென்னை மாகாணத்தவர் வேறு! மற்ற மாகாணத்தவர் வேறு! வாழும் நிலம், ஆளும் தட்பவெட்பங்கூட இயற்கையிலேயே வெவ்வேறானவை! வாழுகின்ற மக்களின் மனப்போக்கும், பழக்க வழக்கங்களும் மாறானவை—எதிரானவை!

நாட்டுப் பிரிவினைக்கு நாம் கூறும் பல உண்மைகளில் இவையும் சில. பிரிவினையால் பிழைப்புக்கெடும் என்றெண்ணுகிற நிலையிலுள்ளவர்கள்கூட தென்னாடு—வடநாடு என்கிற தலைப்பில், தலையைக் கொடுத்து விட்டோமே என்ன செய்வது என்கிற மாமியார்—மருமகள் உறவில், இந்த வேறுபாடுகளின் உண்மையை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளியிட்டுக்கொண்டு வருவதையும் நாம் கேட்கிறோம்.

வடநாடு என்று சொல்லப்படும் பெரும்பகுதியான ஆரியவர்த்தம், இன்று கொலைக்களமாக, கொள்ளையர் ஆளுகைக்குட்பட்டு, மனித நாகரீகத்தைப் பலிபீடத்திலேற்றி, மதிகெட்ட செயல் செய்கிறதென்றால் அதற்குக் காரணம் மத உணர்ச்சியின் தடிப்பு—வெறி. இதற்குரிய பரிகாரம் வேறு.

தென்னாடு என்று பேசப்படும் திராவிடம், பார்ப்பனீய மதமான இந்துமத வலையில் சிக்கி, பார்ப்பனீய ஆளுகைக்குட்பட்டு, மனிதப் பண்பை இழந்து மானமிழந்து வாழும் நிலையில், இன்று சிறு அளவுக்கு இன உணர்ச்சி தலையெடுத்து அதன் காரணமாகப் பார்ப்பனர்—திராவிடர் என்கிற உணர்ச்சி வலுத்து வருகிறதென்றால் இதற்குக்காரணம் திராவிடர்களிடையே புதிதாக ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சி. இதற்குரிய பரிகாரம் வேறு.

வடநாட்டில் இந்து—முஸ்லிம் வேற்றுமை. இது மத அடிப்படையில் வளர்ந்தது. எப்பொழுது முஸ்லிம் மதம் வந்ததோ அப்பொழுதிருந்தே அதாவது தனக்கு முற்றிலும் விரோதமானது, ஏமாந்தால் தன்னழிவுக்கு வழிகோலுவது என்கிற நிலை இந்து மதத்திற்கு ஏற்பட்டதிலிருந்தே பரம்பரை விரோதமாக வளர்ந்தது.

திராவிட நாட்டில் திராவிடர்—ஆரியர் வேற்றுமை. இது இன அடிப்படையில் ஒவ்வொரு காலத்தில் தோன்றி, பிறந்த வீட்டில் செத்த குழந்தை போல, தோன்றிய காலத்திலேயே மறைந்து இருள் சூழ்ந்தது. உலகப்பொது அறிவின் உத்வேகமான ஆற்றலால்-விஞ்ஞான அறிவின் துணையினால், இன்று அந்தகார இருள் குறைய, அதனால் ஆரியப் பார்ப்பனரின் நயவஞ்சகமும், தந்திரமுமான ஏற்பாடுகள் துலங்க, அவ வேற்பாட்டினால் உழைப்பு அவமதிக்கப்பட்டு உன்மத்தர்கள் உயர்வடையும் உண்மை நிலை புரியவே, உண்மைக்காட்சியால்-உரிமை வேட்கையால் சேர்ந்தேயறியாத திராவிடர்கள் சிறு அளவுக்காவது சேர்ந்து நிற்க, இச்சேர்க்கை தனது ஏகபோக ஆட்சிக்கு ஆட்டங்கொடுக்குமே என்ற தன்னலவிருப்பினால், பார்ப்பனர் மானமழிந்த செயல்பல செய்து எதிர்க்க, அவ்வெதிர்ப்பினால் வலுத்தது இவ்வேற்றுமை.

இருவகை வேற்றுமையும் அழியத்தான் வேண்டும். அழிக்கத்தான் வேண்டும். அதற்குப் பரிகாரம் என்ன? டைப்பாயிட் காய்ச்சலையும், மலேரியா காய்ச்சலையும் போக்கடிக்கவேண்டுமானால் அதற்குப் பரிகாரம் என்ன? காய்ச்சல் என்ற ஒற்றுமையால் பரிகாரமும் ஒற்றுமையாயிருக்குமா? பரிகாரம் ஒன்றானால் விபரீதமல்லவா விளையும்? வடநாட்டுப் பிரச்னையைத் தீர்த்துவிடும் என்று கருதக்கூடிய மருந்து, திராவிட நாட்டுப் பிரச்னையையும் போக்கிவிடும் என்று கருதினால் அது மருந்தின் கோளாறு அல்ல! மருத்துவனின் முட்டாள் தனம்! மருந்துதர முன்வருவோர் இதை உணரவேண்டும்!

திராவிடத்தின் ஈடு எடுப்பற்ற மருத்துவராம் நம் பெரியார் அவர்கள், திராவிட நாட்டிலுள்ள திராவிடர்—ஆரியர் பிரச்னைக்கு மருந்து தந்திருக்கிறார்கள். மருந்தில் என்னென்ன கலந்திருக்கிறது? அதனால் என்னென்ன பலனுண்டாகும்? எத்தனை வருஷம் கியாரண்டி என்றெல்லாம் அந்த மருந்திற்கு விளக்கமும் கொடுத்திருக்கிறார்கள். நோயாளிக்கு மருந்து கொடுக்கிறோம் என்று சொல்லி, தலைமாட்டில் குந்தியிருந்து கொண்டு, தங்கள் அலங்காரத்திலும் சாப்பாட்டிலுமே கருத்தாக, டாக், டீக் என்று நடையழகு காட்டும் தாதிகள் இந்த விளக்கத்தைக் காதில் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

திராவிடத்தின் செழிப்புக்கு, பெருமைக்குக் காரணமாயிருப்பவர்கள் திராவிட நாட்டிலுள்ள பாட்டாளிகள், தொழிலாளிகள். இப்பேர்ப்பட்டவர்கள் நேரடியாகப் பொருளைக் குவித்துப் பெருக்காமல் இருக்கலாம்! பெருக்காததினால் நேரடியாகச் சர்க்காருக்கு வரியும் கொடுக்காமலிருக்கலாம்! ஆனால் உண்மையில் வரி கொடுப்பவர்கள் இவர்கள்தான். இவர்களின் உழைப்புத்தான், பொருளாக, வெள்ளி ரூபாயாக, தங்க நகைகளாக, மாடமாளிகைகளாக, மகிழ்ச்சிக்குரிய வாகனாதிகளாக, ஏன் உயிர் வாழ்க்கைக்கே அடிப்படையான உணவுப் பொருள்களாகப் பல்வேறு உருவங்களாகின்றன. இதை அப்பாவியான கூர்மையா அவர்கள் உணர வேண்டும்.

சில நாட்களுக்கு முன் நெல்லூரில் மாணவர்கள் கூட்டத்தில் பேசிய தோழர் கூர்மையா அவர்கள், "தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்திலும், கருஞ்சட்டை இயக்கத்திலும் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்; இவற்றை மாணவர்கள் உடனே கைவிட வேண்டும்; இல்லையேல் உபகாரச் சம்பளங்கள் நிறுத்தப்படும்! தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களால் சர்க்காருக்கு எவ்வித வரி வருமானமும்

கிடையாது! இதனை மாணவர்கள் நெஞ்சில் நிறுத்த வேண்டும்!'' என்பது போலக் கூறியிருக்கிறார்.

இவரல்லவா தாழ்த்தப்பட்டோரின் சரியான பிரதிநிதி! இவருடைய அறிவுத் தகுதியல்லவா தகுதி! தாழ்த்தப்பட்டோர் குறை நீக்கும் இவர் பொறுப்பே பொறுப்பு! இப்பேர்ப்பட்ட மந்திரி நமக்கு எப்படிக் கிடைப்பார்! இந்தமாதிரியல்லவா அந்த மாணவர்கள் தன்னைக் குறித்துப் பெருமையாகப் பேசியிருக்கவேண்டும்; தன்னுடைய இந்த அறிவுரையைக் கேட்டு என்று அவர் எண்ணியிருந்தாலும் எண்ணியிருக்கலாம்.

அந்த மாணவர்கள், "அட அடி முட்டாளே! உனக்கு ஏதோ ஆயிரக்கணக்கில்சம்பளமும் சிறுஅளவு பெருமையும் கிடைக்கிறதே என்ற நினைப்பினால், எங்கள் சமூகத்தையே இழிவாகப் பேசுகிறாயே! அடசமூகத்துரோகி! உழைப்பின் உயர்வையறியாத உலுத்தனே! தாழ்த்தப் பட்டோரின்—பாட்டாளிகளின் உழைப்பில்லா விட்டால் இந்த நாடு ஏது? இந்த அரசு ஏது? நீ மந்திரியாய் வருவதும் எப்படி? இதையறியாத நீ விபீஷணனாக எவ்வளவு காலம் நீடிக்கமுடியும்? எங்களுக்குத் தரப்படும் உபகாரச் சம்பளம் நிறுத்தப் பட்டால், எங்களின் ஏட்டுப் படிப்புத்தானே கெடும்! ஆனால் எங்களின், எங்கள் பாட்டாளித் தோழர்களின் உழைப்பு நிறுத்தப்படுமானால் எந்த மனிதன்தான் உயிர்வாழமுடியும்? எந்த அரசுதான் நிலைத்திருக்க முடியும்? எந்தக் கடவுள் தான் பிழைத்திருக்க முடியும்? எங்களுக்குத் தரப்படும் உபகாரச் சம்பளத்தை ஏதோ கருணையில் முளைத்தபிச்சைக் காசு என்று நீ நினைக்கின்றாய்! அது உன்னுடைய புத்தியை, அறிவுச் சூனியத்தைக் காட்டும்! இந்த உபகாரச் சம்பளம், எங்கள் உரிமை வேட்கையைத் தணிக்க, எங்களுக்குத் தரப்படும் கூலி கூடஅல்ல! லஞ்சம்! என்று அன்று அவர்கள் திருப்பிக் கூறவில்லை. ஆனால் இப்படிச் சிலர் எண்ணியிருப்பார்களேயானால்,அந்த எண்ணத்தைத் தவறு என்றோ முறைகேடானது என்றோ தோழர் கூர்மையாவோ அல்லது அவரைப் போன்றவர்களோ சொல்லிவிட முடியுமா என்று கேட்கிறோம்.

கூர்மையாவின் அறிவு கூர்மழுங்கியது ஒருபுறமிருக்கட்டும்.உழைப்பிலேயே பிறந்து உழைப்பிலேயே மடியும் பாட்டாளித் தோழர்கள் நிலை உயர்வடைய வேண்டுமென்பதை, மறுத்தால் தம் வாழ்வும் மக்கி மடிய வேண்டும் என்பதை யார்தான் மறுக்க முடியும்? ஒவ்வொருவரும் இன்று தொழிலாளிகளின் பெயரைச்சொல்லித்தானே தங்களுடைய சொந்தக் காரியாதிகளை நடத்திக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது! இந்தப்பாட்டாளித்தோழர்கள், விசித்திரமான பார்ப்பனீய அமைப்பினால் சூத்திர ஜாதியாய், தீண்டப்படாத ஜாதியாய், மழையிலும் வெயிலிலும் உழைத்துழைத்து உடல் கருகி, மேனி வாடி, உழைத்த பயனையடையாமலிருப்பதுடன் இல்லாமல், உழைத்தோம் என்கிற பெருமையைக்கூட எண்ண முடியாமல், உழைப்பதும், அதன் பயனைப் பிறருக்குக் கொடுத்து விட்டு, அவர்கள் தயவால் நாம் வாழுகின்றோம் என்கிற கேவலமான எண்ணத்துடன் வாழும்படியான நிலையையுமல்லவா இந்நாட்டில் காண்கிறோம்.

100க்கு 97 போன திராவிடப் பாட்டாளி மக்கள் இந்த அவல வாழ்வு ஏன்வாழவேண்டும்? இவர்களில் 100க்கு 90 பேர் தங்களுடைய பெயரை எழுதுவதற்குக் கூட வகையற்றவர்களாக ஏன் இருக்கவேண்டும்? ஏமாற்றிவாழும் சிறு கும்பல் பார்ப்பான், சைவன் என்கிற பெயர் தாங்கி முதல்ஜாதியாய், உயர்ந்த ஜாதியாய்ப் பெருமையுடன் வாழ, மற்ற 90பேர்கள் 4ம் ஜாதியாய் 5ம் ஜாதியாய் தேவடியாள் பிள்ளைகளாக ஏன் திரிய வேண்டும்? இந்த இழி நிலைக்கு, இவர்களின் உழைப்புச் சுரண்டப்படுவதற்கு, இவர்கள் மடமையில் அழுந்தியிருப்பதற்கு, இவர்கள் தலை நிமிர முடியாத அடிமைகளாகவேயிருப்பதற்குக் காரணம், உண்மைப் பார்ப்பன மதமான இல்லாத இந்து மதமும், இந்து மத அடிப்படையில் புகட்டப்படும் கல்வி, கலைகளும், பார்ப்பனர்களின் படுமோசத்தால்பிரிந்து வாழும் பல ஜாதி ஏற்பாடுகளுமல்லவா?

இந்த ஜாதி வேற்றுமையொழிந்து, மதப்பித்தலாட்டம் மறைந்து, மக்கள் மக்களாகவாழ, மனிதனின் உழைப்பு மதிக்கப்பட வழியென்ன? இந்த வழியைத் தூத்துக்குடி மாநாட்டிலும் பெரியார் அவர்கள் விளக்கி வற்புறுத்தியதைத்தான் நம் பெரியார் அவர்கள் தந்த மருந்து என்று குறிப்பிட்டோம்.

"நாம் இப்பொழுது சுயராஜ்ஜியம் பெற்று விட்டோம் என்று சொல்லிக்கொள்ளுகிறோம். சுயராஜ்ஜியம் பெற்ற பிறகும் உழைப்பவன் இழிந்த ஜாதியாய் இருக்கலாமா? அவனை இழி ஜாதியாய் வைத்திருக்கும் மதம் எதுவோ அந்த மதத்தை வாழவிடலாமா? உழைப்பவன் அறிவுபெற அதற்கான ஆரம்பப்பாடசாலைகள் சுயராஜ்ஜியத்தில் பெருகவேண்டாமா? ஆரம்பப்பாடசாலைகள் பெருகுவதற்கு வசதியில்லாத போது, மேல்படிப்புக் கல்லூரிகள் ஏன் சுயராஜ்ஜியத்தில் இருக்க வேண்டும்? இதை சுயராஜ்ஜிய அரசாங்கம் கருதவேண்டாமா?''

"பல பிரிவுகள் உள்ள இந்த நாட்டில், பிரிவை ஒழித்து ஒற்றுமைக்கான வழி எதுவோ அதைச் செய்யாமல், அல்லது யாவரும் சமவுரிமையடைவதற்கு முறை எதுவோ அதைக் கையாளாமல், 100க்கு 3பேர்களாக உள்ள மேல் ஜாதிக்காரர்கள் அனுபவித்து போக, சுரண்டியதுபோக, மீதியுள்ள எச்சிலுக்குத்தான் மற்ற ஜாதியார்கள் சண்டை போட்டுக் கொண்டு அநுபவிக்கவேண்டுமென்கிற அமைப்பு சுயராஜ்ஜியத்தில் இருக்கலாமா?

"உத்தியோகங்கள் மதிக்கப்பட்டு அதற்குப் பெருமை கொடுக்கப்படுகிறவரையிலும், பல ஜாதிகள் அமைப்பு இருந்து அவைகளுக்குத் தனித்தனியே உயர்வும், தாழ்வும் கொடுக்கப்படுகிற வரையிலும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ முறையை மாற்றாமல், அந்தந்த ஜாதிக்கு அல்லது அந்தந்த வகுப்புக்கு ஏற்ற முறையில் அல்லவா உத்தியோகங்கள் வழங்க வேண்டும்? எப்படியும் 100க்கு 3வீதத்திற்கு மேல் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுக்கலாமா?''

"இழிவான வேலை என்று கருதப்படுகிற உழவுவேலை, தெருக்கூட்டம் வேலை, கக்கூஸ் எடுக்கும் வேலை, சிரைக்கும் வேலை, வெளுக்கும் வேலை, பியூன் வேலை முதலிய உடலுழைப்பு வேலைகளில், எல்லா ஜாதியாரும் அவரவர் விகிதாச்சாரத்திற்கு ஏற்ற கணக்குப்படி வேலைசெய்தே ஆகவேண்டும் என்று வற்புறுத்துவதல்லவா, இந்த உடலுழைப்பு

வேலையைச் செய்யாத சமூகத்தினருக்கு "மேல்தரம்" என்று மதிக்கப்படுகின்ற உத்தியோகங்களைக்கொடுக்காமலிருப்பதல்லவா, உண்மையிலேயே உயர்வு, இழிவு என்கிற வித்தியாசங்களைப் போக்கும் மார்க்கங்களாகும்"

"சர்க்கார் என்பது அதுவும் சுயராஜ்ஜிய சர்க்கார் என்பது எப்படி ஒரு ஜாதிக்கு மட்டும் தர்ம சத்திரமாக இருக்க முடியும்? சமுதாய சமத்துவம் ஏற்பட வேண்டுமானால், மற்ற ஜாதியார் பார்ப்பனர் பார்க்கும் உத்தியோக எண்ணிக்கையை எட்டும் வரையிலும், புதிதாகப் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதை நிறுத்தியாக வேண்டுமல்லவா?"

"பொதுமக்களின் உழைப்பில் கடைந்தெடுத்த வரிப்பணத்தினால் நடக்கும் சர்க்கார், எல்லா மக்களுக்கும் கல்வியறிவைப் பரப்ப முடியாத நிலையில், மக்கள் ஜாதிவாரியாக உள்ள நாட்டில், ஜாதி விகிதாச்சாரத்திற்கு ஏற்ற கணக்குப்படிதானே பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். எந்த ஜாதியாரில் பெரும்பாலோர் படிக்கவில்லையோ அந்த ஜாதியார்,படித்த ஜாதியாரின் எண்ணிக்கையை எட்டும் வரையிலும், படித்தஜாதியார் மேலும் மேலும் படித்துக் கொண்டேயிருப்பதற்கு சர்க்காரின் பொதுப்பணம் செலவு செய்யப்படலாமா?"

இன்றுள்ள சமுதாய நிலைமைக்கு, திராவிடர்—ஆரியர் போராட்ட நிலைமை மறைவதற்கு, உயர்ஜாதி—இழிஜாதி என்ற உளுக்க வேண்டிய மனப்பான்மை மண்மூடுவதற்கு ஏற்ற பரிகாரம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையைஉத்தியோகத்திலும், உத்தியோகத்திற்குத் தயார்ப்படுத்தும் பள்ளிக்கூடத்திற்குச் சேர்ப்பதிலும் கையாளப் படவேண்டும் என்ற பெரியாரவர்களின் இந்த மார்க்கத்தை—பல தடவையும் நம்மால் விளக்கி வரப்பட்ட இந்த முறையை, சமுதாய சமத்துவத்தில் அக்கரையுடைய எந்த நியாயமான பிராணியும் தவறு என்று சொல்லிவிடமுடியாது.

தூத்துக்குடியில் ஒன்றரைலட்சம் திராவிடர்கள் ஒரே மனதாக இந்தக் கருத்தை வற்புறுத்தினார்கள். அதுதான் 11, 12, 23, 24 25-வது தீர்மானங்களாக உருவாயிற்று.

சாதி என்பவை ஒழிக்கப்படும் வரை ஜாதிவாரிப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். இது 11.

சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில், இந்திய யூனியன் அரசாங்கம், சென்னை மாகாண ஜாதிவாரிப் பிரதிநிதித்துவமுறைச் சட்டத்தை அகில இந்திய உத்தியோகங்களிலும் அநுமதிக்கவேண்டும். இது 12.

நாட்டில் மதசம்பந்தமில்லாத ஆட்சி நிலவவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால், மத சம்பந்தமான பாடங்கள் பள்ளிகளில் கூடாது; அரசாங்கம் உயர்தரப்படிப்புக்குப் பொருள் உதவி செய்யக்கூடாது, கட்டாய இலவச ஆரம்பப்படிப்புக்கும், செகண்டரிப் படிப்புக்குமே சகல பண உதவியும் செய்யவேண்டும்............ இது 23.

ஜனநாயகம் தழைக்க, கட்டாய ஆரம்பக் கல்வியை அளிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். இது 24.

கல்விநிலையங்களில் வகுப்பு விகிதாச்சாரம் அநுஷ்டிக்காமல் இருப்பது, எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் வேண்டும் என்ற நியாயமான கொள்கைக்கு விரோதமானதும், அக்கொள்கையை அழிப்பதானதுமே ஆகும். இது 25.

இந்தத் தீர்மானங்கள் வற்புறுத்தும் பரிகாரமுறையை,இந்தநாட்டு நிலையையறியாத வடநாட்டுக்குருடர்களும், அறிந்தும் அறியாதவர்கள்போல் நடிக்கவேண்டிய கட்டாயத்தில் குருடர்களாகவே இருக்கப் பிரியப்படுபவர்களும் தவிர, நம் மாகாணத்தில் வாழும் கண்படைத்த எவரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

இன்றைய திராவிடர்களில் 100க்கு 10பேராவது படித்தவர்களாயிருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன?

திராவிடர்களில் சிலர் இன்று உயர்தர உத்தியோகங்களிலும் இருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன?

இன்று ஓமந்தூரார் மீண்டும் காங்கரஸ் கட்சித் தலைவராய் வந்திருக்கிறாரென்றால், இன்றையச் சென்னை மாகாண மந்திரி சபையில் பெரும்பாலோர் திராவிடர்களாயிருக்கிறார்கள் என்றால், அதற்கு உண்மையான காரணம் என்ன?

தோழர் முத்தையா முதலியாரவர்களின் வகுப்பு வாரி உத்தியோகச் சட்டம் தான் இவைகளுக்குக் காரணம். இதை இல்லையென்று நாணயமான எந்தக் காங்கரஸ் மந்திரி தான் மறுக்க முடியுமென்று கேட்கிறோம்.

கேள்வி கேட்பாரற்ற கேவலமான நிலையில் வாழ்ந்த திராவிடர்கள், முக்கியமாக உத்தியோகத் துறையில் ஓரளவுக்காவது இடம் பெற்றிருக்கின்றார்கள் என்றால், அவர்கள் யாராயிருந்தாலும் நீதிக்கட்சியை நெஞ்சில் நினைக்காத நன்றிகெட்ட பிராணிகளாக இருக்க முடியாது என்பது உறுதி.

வகுப்புவாரி உத்தியோக நியமனம், வகுப்புவாரிப் படிப்பு முறை இன்று சிறு அளவுக்காவது பயன் தந்திருக்கிறதென்றால், இனிஆட்சியாளர்கள்என்ன செய்ய வேண்டும்? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையில் இப்போது என்னென்ன குறைபாடுகள் இருக்கிறதோ அவற்றை நீக்கி, உண்மையிலேயே எல்லா ஜாதிகளுக்கும் அந்தந்த ஜாதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி பிரதிநிதித்துவம் அமைய அல்லவா ஏற்பாடு செய்ய வேண்டும்? அப்படித்தானே நாட்டின் பொதுநலனிலும் நியாயத்திலும் அக்கரையுடைய எவரும் எதிர்பார்க்க முடியும்.

ஆனால் ஓமாந்தூரார் மந்திரி சபை ஏற்பட்ட பிறகு, வகுப்புவாரி வினியோக முறையில் பார்ப்பனர்களுக்குக் கேடு கொஞ்சமும் இல்லாமல், அவர்கள் நிலைமையைப் பாதுகாத்துத்தர முன்வந்த போக்கைத்தான் நாம் கண்டோம்.

ஆதித்திராவிடர்களுக்கு 100க்கு 14. முஸ்லிம்களுக்கு 100க்கு 7. கிறிஸ்தவர்களுக்கு 100க்கு 7. பார்ப்பனர்களுக்கு 100க்கு 14. பார்ப்பனரல்லாத, கிறிஸ்துவரல்லாத, முஸ்லிமல்லாத, ஆதித்திராவிடரல்லாத 100க்கு 85பேராயிருக்கும் அல்லாத முண்டங்களுக்கு 100க்கு 56. இந்த விகிதாச்சாரம் தான் நியாயம் என்று ஓமாந்தூரார் மந்திரிசபை தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பின் அநியாயத்தை, அக்கிரமத்தை நாம் அப்போதே வன்மையாகக் கண்டித்தோம். ஆனால் பார்ப்பனர்களோ இதைக் கண்டு வயிறெரிந்தார்கள் என்பதை நாம் மறக்கவில்லை.

காந்தியாரைக் கொன்று, பூரணப் புராண ராஜ்ஜியம் ஏற்பட்டு

விட்டது என்று கும்மாளம் கொட்டினோமே! இன்னும் இந்தச் சனியன் தீரவில்லையே! நம் ஏகபோகமான இஷ்ட சித்தியடைவதற்கு இப்போதும் தடைதானா! என்று பார்ப்பனர்கள் அங்கலாய்க்கலானார்கள். இந்த அங்கலாய்ப்பின் எதிரொலிதான், சென்ற மாதம் 21ம் தேதி தோழர் ராகவய்யா அவர்கள் வழியாகச் சட்டசபையில் எதிரொலித்தது.

"பிராமணர், பிராமணரல்லாதார் வேற்றுமையைச் சர்க்கார் அதிகார பூர்வமாக ஆதரிக்கின்றனரா?'' இது கேள்வி.

பிறப்புமுதல் இறப்புவரை இவ் வேற்றுமை இருக்கும் வரை, அவற்றைச் சர்க்கார் எப்படி அங்கீகரிக்காமலிருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இது பதில்.

இந்தப் பதிலைத் தந்தவர் மதி மந்திரி தோழர் அவினாசிலிங்கம் அவர்கள். இது அவருடைய சொந்தக் கருத்தாக இருக்க முடியாதென்பதையும், மந்திரி சபையின் பொதுக் கருத்தைத் தான் அவர் தெரிவித்திருக்க வேண்டும் என்பதையும்தான் எவருமெண்ண வேண்டும்.

இந்த நிலைமையில், நாம் நம்முடைய கோரிக்கையை மாநாட்டில் வற்புறுத்தியதைக் கண்ட இந்திய யூனியன், 15 நாட்களுக்குப் பிறகு அதாவது இந்த மாதம் 24ல் தன்னுடைய திட்டம் என்ன என்பதை விளக்கி மாகாண மந்திரி சபைகளுக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

"இனிமேல் உத்தியோக நியமனங்களில், இந்துக்களிடையே வகுப்புவாரி நியமனம் கூடாது. இப்படிச் செய்வது புதிய வித்தியாசங்களைச் சிருஷ்டிப்பதாகும். இது இப்போதையச் சர்க்காரின் கொள்கைக்குகந்ததாக இல்லை. இவ்வேற்றுமைகளை மாகாண சர்க்கார்கள் அங்கீகரித்திருந்தாலும், இல்லாவிட்டாலும் இது தான் இந்திய சர்க்காரின் கொள்கை'' என்று பார்ப்பனீய ராமராஜ்ய சர்க்கார் அறிவித்து விட்டது.

இந்த அறிவிப்பைக் கேட்டுப் பார்ப்பனர் மனம் குளிர்ந்திருக்கும்! காந்தியாரைக் கொன்ற போது அடைந்த திருப்தியைக் காட்டிலும் பெருந்திருப்திப் பட்டிருப்பார்கள்! தேசியப் போர்வையைப் போர்த்தி நிற்கும் பார்ப்பனர்களின் தினசரிகளும், தூதுவேலை செய்தாவது பிழைக்கவேண்டும் என்று எண்ணும் பார்ப்பனப் பாதந்தாங்கிகளான நம் விபீஷணர்களின் தினசரிகளும் இதை வரவேற்றுப் பூரிப்படையலாம்! சோஷியலிஸ்ட் என்ற புதிய பட்டுப்போர்வையில் மறைந்து நிற்கும் சுகவாசிகளான பார்ப்பனர்கள் இதைக் கேட்டுத் துந்துபி முழக்கலாம்! ஆனால் திராவிடர்களின் நிலை என்ன?

வகுப்புவாரிவிபரீதத்துக்குவெடி என்கிறது சுதேசமித்திரன் இதைக் கேட்டு. மேலும் ஒருபடி மேலே சென்று "புத்தியாய்ப் பிழையுங்கள் திராவிட மந்திரிகளே! எப்பொழுது உத்தியோகத்திற்கு வகுப்புவாரி விபரீதம் கூடாதென்று மத்திய சர்க்கார் தெரிவித்துவிட்டதோ, இதையறிந்து, இந்தப்போக்கைக் கல்வி நிலையங்களிலும் நீங்களாகவே கைக்கொள்ளுங்கள்! மத்திய சர்க்கார் சூடு போட்ட பிறகுதான் உணர்ச்சி வரும் என்பது போல, சொரணையற்றமாடுகளாக நடந்து கொள்ளாதீர்கள்! என்று அது எச்சரிக்கையும் செய்கிறது.

திராவிட மந்திரிகள் என்ன செய்யப் போகிறார்கள்? மத்திய சர்க்காரின் இந்தத் திட்டம், மாகாண சர்க்காரின் போக்கை நேரடியாகப் பாதிக்காது என்ற நிலையிலிருந்தாலும் மாகாண சர்க்காரில் வீற்றிருக்கும், மாகாணத்தின் உண்மையான நிலையையறிந்த திராவிட மந்திரிகள், சென்ற மாதத்தில் ராகவய்யாவின் கேள்விக்குப் பதில் சொல்லிய மந்திரி சபை எப்பொழுது என்ன செய்யப் போகின்றது? வழக்கம்போல மத்திய சர்க்காருக்கு வளைந்து கொடுத்து, பல்லைக்காட்டி வாலை மடக்கிக் கொள்ளுமா? அல்லது அக்கிரமத்தை எதிர்த்து நிற்கும் தைரியத்தைக் கொள்ளுமா?

நம்மைப் பொறுத்தவரையில் நாம் இந்த அநீதமான போக்கை எதிர்பாராதவர்கள் அல்ல! ஆகஸ்ட் 15 திராவிடர்களின் துக்கநாள் என்பதை, அப்பொழுதே திராவிடர் கழகம்திராவிடர்களுக்குக் கூறியது! இந்தச் சுயராஜ்ஜியம்பார்ப்பனர்களின் ராஜ்ஜியந்தான்என்பதை இன்னும் ஒவ்வொரு செயல்களிலும் வற்புறுத்தப்படுவதைப் பார்க்கலாம்! திராவிடன், திராவிட உணர்ச்சி பெற்று இந்த மதச் சாக்கடையிலிருந்து எப்பொழுது வெளிவருகிறானோ, அதுவரையிலும் அவனுக்கு விமோசனமில்லை! திராவிட நாட்டுப்பிரிவினை தான் இந்த விமோசனத்தைக் கொடுக்கக்கூடியது! திராவிட இன உணர்ச்சியற்று திராவிடன் இந்து மதச் சேற்றை எவ்வளவு காலம் பூசிக் கொண்டிருக்கின்றானோ அது வரையிலும் அதன் பயனை அநுபவிக்கத்தானே வேண்டும்!

மத்திய சர்க்காரின் கையில் குடுமியைக் கொடுத்து விட்டு, மானங்கெட்டு வாழும் நம் மந்திரிசபை, இந்தக் காரியத்திலும் ஒத்துப் பாடலாம்! அல்லது மவுனம் சாதிக்கலாம்! எப்படியானாலும் திராவிடன் உண்மை நிலையை உணரவேண்டும்!

வெளிப்படையாகவே துப்பாக்கியேந்த வேண்டுமா? என்று பார்ப்பனர்கள் ஒரு புறம் கேட்கின்றனர். பார்ப்பார்களுக்குத்தான் உத்தியோகமும், உயர்வாழ்வும் என்று முழக்குகிறது மற்றொரு புறம்மத்தியசர்க்கார். யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே'' என்பதுபோல ஆச்சாரியார் வைஸ்ராயாக வருவதற்கு முன்னாலேயே, அவருடைய ஆட்சி இன்னும் எப்படி எப்படியிருக்கும்? ஆட்சியில் எந்தெந்த மாதிரி யெல்லாம் நடக்கலாம்? என்று காட்டுகின்ற அடையாளங்கள்தாம் இந்த நிகழ்ச்சிகள். சுருக்கமாக ஆரியம் போருக்கழைத்து விட்டது என்ற அடையாளம் தான் இது.

மானங்கெட்ட திராவிட சமுதாயம் ஒன்று வாழவேண்டும்! இல்லாவிட்டால் மண்ணோடு மண்ணாய் மக்கி மடியவேண்டும்!

"மத்திய சர்க்காரின் திட்டத்தை மாகாண சர்க்காரும் பின்பற்றட்டும்! எந்த உத்தியோகத்திலும் எந்தப்படிப்பிலும் பார்ப்பானே இடம் பெறட்டும்! இழி ஜாதி மக்களாகவே இந்நாட்டுப் பெருங்குடி மக்கள் விளங்கட்டும்! எதற்கும் பார்ப்பானை எதிர்பார்த்தே, அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே, அடிமையினும் அடிமையாக, அவஸ்தையறியாத எருமைகளாக வாழ்ந்தொழியட்டும்!'' இப்படிக் கனவு கண்டு திருப்திப்படுகிறார்கள் பார்ப்பனர்கள்.

முடிவு என்ன?

திருப்திப்படுகின்ற பார்ப்பனர்களே! சிந்தித்துப்பாருங்கள். இன உணர்ச்சி பெற்ற திராவிடன் இந்த நாட்டில் இருக்கும் வரையிலும் உங்கள் கனவு, உங்கள் சூழ்ச்சித்

திட்டம் ஒருநாளும் பலியாது! ஆச்சாரியார் ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தாலும், அகம்பாவ நேரு பார்ப்பனரின் ஆலோசனையால் விளைந்ததென்றாலும், பார்ப்பான் பார்ப்பானாகவே வாழும் நிலை இருக்கும் வரையிலும் இந்தத் திட்டமோ, இதைப் போன்ற வேறு திட்டங்களோ ஆக்குவது, அவற்றை அமுலுக்குக் கொண்டு வருவது எல்லாம் கருதுகிற பயனைக் கைகூடச் செய்யாது. வகுப்புவாரி விபரீத வெடி உண்மையிலேயே விபரீத வெடி தான்! ஆம். அது ஆரியத்தின் அழிவுக்கு விபரீதமான வெடியாகத்தான் முடியும். பார்ப்பனீயத்தின் ஆசை, பார்ப்பனீயத்தின் முடிவு அதுதான் என்றால் நடக்கட்டும்! நமக்குக் கவலையில்லை.

★

வருந்துகிறோம்.

நமது தஞ்சாவூர் ஏஜண்டுத் தோழர் டி. ஏ. பாலகிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பாப்பா அவர்கள் குழந்தைப் பிறப்பின்போது தஞ்சை அரசியலார் மருத்துவ விடுதியில் இயற்கை யெய்தியமை கேட்டு வருந்துகிறோம். நமது அநுதாபத்தைத் தோழர் பாலகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காந்தியார் கொலை வழக்கு.

டில்லி. 27.

இன்று காலை 10 மணிக்கு செங்கோட்டையில் விசேஷ ஜட்ஜ் தோழர் ஆத்மசரண் முன்பு 1 நாதுராம் விநாயக் கோட்ஸே 2 நாராயண் தாத்ரேய ஆப்தே 3 வி. ராமகிருஷ்ணகாகாரே 4 திகம்பர் ராமச்சந்திரா பாட்கே 5 மதன்லால் 6 கிஷ்டய்யா 7 கோபால் விநாயக கோட்ஸே 8 விநாயக் தாமோதர் சவர்க்கார் 9 தத்தாத்ரேய சதாசிவ பராச்சுரே ஆகியோர் மீது காந்தியார் கொலை வழக்கு விசாரணை தொடங்கியது. பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து 2 மணி நேரம் விவாதம் நடந்த பிறகு ஜூன் 14-ம் நாள் வரை ஒத்திவைக்கப்பட்டது.

தொடக்கத்தில் 8 வது எதிரியின் சார்பில் வழக்கை 2 மாதங்கள் ஒத்திவைக்க வேண்டுமென வேண்டினர். அதையொட்டித்தான் ஜூன் 14 வரை ஒத்திவைக்கப்பட்டது. 8-வது எதிரிக்கு உடல்நலம் இல்லை என்றுகூறி மெத்தை தைத்த ஆசனம் வேண்ட அவ்வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

கோட்சேயும் வேறு 4, எதிரிகளும் 8-வது எதிரிவக்கீல் போபத்கார்மூலம் தாங்களே எதிர் வழக்குக்கு ஏற்பாடு செய்வதாகவும், மற்றொரு கோட்ஸே தனக்குத் தனி வக்கீல் ஏற்பாடு செய்யப்போவதாகவும் குறிப்பிட்டனர். பாட்ஜேயும், மதன்லாலும் எதிர்வழக்காட விரும்பவில்லை.

மதன்லால் 3முறை ஒலிபெருக்கி முன் நடந்து வாக்குமூலம் கொடுக்க விரும்பியும், நீதிபதியிடம் ரகசியமாக வாக்குமூலம் கொடுக்க வேண்டியும் ஜட்ஜ் மறுத்து வாக்குமூலத்தை ரிஜிஸ்திராருக்கு அனுப்பலாமென்றும் ஜூன் 14-ம் நாளும் சந்தர்ப்பம் கிட்டுமென்றும் கூறினார்.

எதிரிகள் உற்சாகத்துடன் காரசாரமான பேச்சில் ஈடுபட்டிருந்தனர். 8வது எதிரி சவர்க்கார் விசாரணையைக் கூர்ந்து கவனித்தார். கோட்ஸே பெரு மவுனத்தில் ஆழ்ந்திருந்தார்.

ஏற்காட்டில் பெரியார்.

பெரியார் அவர்கள் கோயமுத்தூர் மருத்தவ விடுதியிலிருந்து 23-ம் நாள் நீங்கி, ஈரோடு வந்து 24-ம் நாள் ஏற்காட்டிற்குச் சென்றிருக்கின்றார்கள். இப்போதைய உடல் நிலையில் முழு ஓய்வு கொடுப்பதே நாம் அவருக்குச் செய்யும் நன்மை என்பதை உணர்ந்து, குறைந்தது ஒரு மாதம் வரையிலாவது எவ்வித அழைப்பும் கொடுக்காமல் தோழர்கள் நடந்துகொள்ள வேண்டுகிறோம். [ஆ-ர்.]

வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு.

30—5—48 ம் நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை 6-மணிக்கு புலவர் அ. கி. பரந்தாமனார் பி. ஏ. அவர்கள் தலைமையின் கீழ் எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவினை நடத்த விரும்பியுள்ளோம். அதுகாலை தாங்கள் வந்திருந்து எங்களை மகிழ்விக்க வேண்டுகிறோம்.

இடம்:—மாங்காடு எல்லப்ப செட்டியார் சத்திரம் [வில்லி வாக்கம்]

அ. பரிமளகாந்தா [விதவை]
ம. மு. இராமச்சந்திரன் [திரு. வி. க. மாணவன்]

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சில் இடம் பெற முடியுமா? அறிவுத் தாகம் கொண்ட திராவிடர்கள் புதுமைச்சுனையை விரும்புகிறார்கள். அதில் கோட்சே கும்பலின் ஆஸ்தீகப் புரட்டு நஞ்சு கலப்பதை என்றும் அனுமதிக்கவே மாட்டார்கள்.

பார்ப்பன மகாநாட்டில் ஒரு பார்ப்பனன் சவால் விடுத்துள்ளான் திராவிடர்களுக்கு. புல் பிடிக்கும்! பிச்சை!க் கைகள் வாளேந்தவும் தயாராம்! இது புதிதல்ல. காந்தியாரின் குருதியை மதத்தின் பெயரால் குடித்தது பார்ப்பனனின் புல் பிடிக்கும் கைதானே. மதத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும் இன்னும் பல கோட்சேக்கள் பார்ப்பனரல்லாதாரின் இரத்தத்தைக் குடித்தாலும் ஆச்சரியமேயில்லை. ஆனால் சவாலை நாங்கள் மனமகிழ்ச்சியுடன் ஏற்கிறோம். என்று வரும் என்று ஏங்கிய நாள் நெருங்கி வந்து விட்டது. தர்ப்பைப்புல் பிடிக்கும் பிச்சைக் கைகளே வாளேந்தும் போது, கூரிய வாள், வேல்களேந்தித் தழும் பேறியுள்ள திராவிடச் சிங்கங்களின் கைகள் துடி துடித்துக் கொண்டிருக்கின்றன காலத்தை எதிர் நோக்கி.

சுயமாகச் சிந்தனை செய்யாத மனிதன் அடிமை. அவன் தனக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் துரோகம் செய்கிறான் என்று இங்கர்சால் அலறுகிறான். இம்மாதிரி துரோகம் செய்யமாட்டோம்; எங்கள் அறியாமையை, அவமானத்தை நீக்கப் போகிறோமென்றால் அடக்கு முறை அணுகுண்டு வீசப்படுகிறது. மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்! நெஞ்சில் பெறும் காயங்களே வைரப்பதக்கமென்று கொள்பவரன்றோ திராவிட வீரர்கள். வீறுகொண்டு போரிட ஊக்கம் கொடுப்பது போன்றது சர்க்காரின் அடக்குமுறை! கடைசித் திராவிடனின் உடலில் இறுதித் துளிக்குருதி இருக்கும் வரை உரிமைக்காக உறுதியுடன் போராட்டமிருக்குமென்பது உருட்டல் பேச்சல்ல.

இங்கர்சாலின் உள்ள ஊற்று, பொங்கிப் பெருக்கெடுத்தோடுவதைப் பாருங்கள்!

“என் உள்ளத்தை நான் மாற்றிக் கொண்டு விட்டேன்” என்று சொல்லுமாறு ஒரு மனிதனைக் கட்டாயப் படுத்தி விடலாம். அவனை இயந்திரத்திலிட்டுக் கடைசி மூச்சு இருக்கும் வரை கொடுமைப் படுத்துங்கள். தீயிலிட்டு வேண்டுமானாலும் கொளுத்துங்கள். ஆனால் அவனுடைய சாம்பல்கூட பழைய அபிப்பிராயத்தையே கொண்டிருக்கும்.”

ஒவ்வொரு திராவிடனின் கடைசி மூச்சும், நாட்டின் நலனுக்காகவே, திராவிடர்களின் தன்மானத்துக்காகவே, மக்களின் அறியாமையை அகற்றி உரிமையை ஊட்டுவதற்காகவே வெற்றிமுரசு கொட்டும். திராவிடனின் கடைசித்துளி ரத்தமும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத மதம், நூல், சட்டம், சமூக நிலை முதலியவற்றைக் கண்டு துடிதுடித்துக்கொண்டு தானிருக்கும். இங்கர்சால் எக்காளமிடுவது போல், நம்மை நெஞ்சு சாம்பலானாலும் நம் கொள்கைகளை விட்டுக் கொடுக்காது. இது அரசாள்வோருக்கும் கோட்சே கும்பலுக்கும் நெஞ்சில் நன்கு நிலைத்திருக்கட்டும்!

பார்ப்பனத் தலைவர்களைப் பேசப் பழக்கியவர்கள் யார்?

★

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பனர்கள் வீடுகள் சாம்பலாக்கப் பட்டதையும், பார்ப்பனர்களின் வீடுகள் சூறையாடப்பட்டதையும், பார்ப்பனத் தாய்மார்கள் அவமானப்படுத்தப்பட்டதையும், பார்ப்பனர்கள் தங்க இடமின்றி ஓடித்தவித்ததையும் நாம் பத்திரிகையில் பார்த்தோம். அதற்கு நஷ்ட ஈடாகப் பம்பாய் மாகாண சர்க்கார் ஒவ்வொரு பார்ப்பனனுக்கும் ரூ. 2000 இனாமாகவும் ரூ. 25,000 வரை ரொக்கக் கடனும் கொடுத்து உதவிய தாகவும் நாம் பத்திரிகையில் பார்க்கிறோம். இங்கு பார்ப்பனர்களுக்கு அத்தகைய கேடு நேரவில்லை. இதற்கு நம் கழகம்தான் காரணமே ஒழிய, காந்தியார் மறைவுக்குத் துக்கப்படுபவர் இந்நாட்டில் இல்லாமற் போனதால் அல்ல.

எங்களால் வந்த வாழ்வு! இன்றோ நமக்குச் சவால்!

இதை அறியாத பார்ப்பனர்கள் ஆணவத்தோடு அந்தணர் மாநாட்டைக் கூட்டி நமக்குச் சவால் விடுகிறார்கள். இந்தப் பார்ப்பனர்களை, இன்றுமட்டுமல்ல, என்றுமே காப்பாற்றிவருபவர்கள் நாம்தான். இந்நாட்டிலிருந்து பார்ப்பனர்களை அறவே ஒழித்துக்கட்டவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த (ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியில்) ஒரு காலத்தில் பார்ப்பனர்கள் தெருவில் வரக்கூட யோக்கியதையற்றுக் கிடந்தார்கள். அந்தக்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியை இருந்த இடம் தெரியாமல் ஒழிக்க, நான் தேசியத்திற்கு முதல் அடிமையானேன். தோழர் வரதராஜுலு நாயுடு அடுத்த அடிமையானார். தோழர் கல்யாணசுந்தர முதலியார் மூன்றாவது அடிமையானார்.

ராஜகோபாலாச்சாரியார், எஸ். சீனுவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர்களுக்கு மேடையில் இடம் வாங்கிக்கொடுத்தவர்களும் அவர்களுக்குத் தமிழ்ப் பேசக்கற்றுக்கொடுத்தவர்களும்கூட நாங்கள் தான்.

அக்காலத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கு, வீடுபிரித்துப்போட்டுக்கிடக்கிறது என்றுகூறத்தெரியாது. வீடு அவுத்துப் போட்டுக்கிடக்கிறது என்றுதான் கூறுவார். சத்தியமூர்த்தி அய்யருக்கு நேக்கு, நோக்கு, அம்மாஞ்சி, அம்மாமி, அவா, இவா இவை தவிர வேறு தமிழ் வார்த்தைகள் பேசத்தெரியாது. ரங்கசாமி அய்யங்கார், டாக்டர் ராஜன், சுதேசமித்திரன் ஆசிரியர் இவர்கள் ஒருசிலர் தவிர்த்து அந்தக்காலத்தில் பார்ப்பனர்களில் தமிழ்ப்பேச ஆள் கிடையாது. கூட்டத்தில் பார்ப்பனர்களுக்குப் பேச உரிமை வாங்கிக் கொடுத்தவர்களும், அவர்களுக்குத் தியாகம் செய்ய (ஜெயிலுக்குப் போக) கற்றுக்கொடுத்தவர்களும் நாங்கள்தான். இராஜகோபாலாச்சாரியாரை வேண்டுமானால் கேட்டுப்பாருங்கள். இது உண்மையா அல்லவா என்று. நாளைக்குக் கவர்னர் ஜெனரலாகப் போகிறார். என்னையும் காண்பார்; கண்டால் வெட்கப்படப் போகிறார். கட்டியழப் போகிறார். ''நான் இப்படியானேன்; நீ அப்படியே இருக்கிறாயே'' என்று கேட்பார். நாங்கள் இல்லாதிருந்தால் இந்த நாட்டில் ராஜகோபாலாச்சாரி ஏது? கவர்னர் ஜெனரல் பதவிதான் ஏது? சர்வம் பார்ப்பனீய சுயராஜ்ஜியம் ஏது? பெற்ற பதவியில் நான் பங்கு கேட்கவில்லை.

சுயராஜ்ஜியம் வந்ததென்றால், குறைகளைச் சொல்லக்கூடவா உரிமை இல்லை.

உங்களுக்குச் சுயராஜ்ஜியம் வந்துவிட்டது, பதவி வகிக்கிறீர்கள் என்றால் எங்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்லக்கூடவா எங்களுக்கு உரிமை இருக்கக்கூடாது? சுயராஜ்ஜியம் வந்து விட்டதென்றால், சுயராஜ்ஜியத்தில் பதவி வகிக்க நேர்ந்த சுயராஜ்ஜியப் புலிகள் மற்றவர்களை ஆடுகளைப்போல் கொன்று அழித்துத்தான் தீரவேண்டுமா? கொள்ளைக்காரர்களும், வஞ்சகர்களும், காலிகளும் எப்போதும் போல் சாதுக்களை, யோக்கியர்களை, ஏழைகளை வஞ்சித்துத்தான், கொள்ளையடித்துத்தான் வாழ்ந்துவரவேண்டுமா? சுயராஜ்ஜிய சர்க்கார் இதைத் தடைசெய்தல்வேண்டாமா? சுயராஜ்ய சர்க்காரில் ஏழைகள் தான் அதிகவரி செலுத்த வேண்டுமா? சுயராஜ்யம் வந்து ஏழைகள் பட்டினி கிடக்க வேண்டுமா? சுயராஜ்யம் வந்து விட்டதென்றால் ஒரு ஊரில் அரிசி ரூபாய்க்கு முக்கால்படியும் ஒரு ஊரில் அரிசி ரூபாய்க்கு இரண்டேகால்படியுமா விற்பது?

உண்மையாகக் கூறுகிறேன் தோழர்களே! உங்களுக்கும் கேட்க அதிசயமாயிருக்கும். நமது மாநாட்டிற்குத் தேவையான அரிசியை விலை சரசமாயுள்ள (அதாவது ரூபாய்க்கு இரண்டேகால்படி விலையுள்ள) தஞ்சை ஜில்லாவில் வாங்கிக்கொள்ள அனுமதி தரவேண்டுமென்று மந்திரியாருக்கு விண்ணப்பித்துக் கொண்டோம். அதற்கு மந்திரியார் பதில் எழுதியிருக்கிறார். ''இந்த மாகாணத்தில் அந்த ஒரு ஜில்லாவில் தான் நெல் அதிகமாக (ஏனோ) விளைந்து விட்டது. ஆகவே அந்த அரிசியை வாங்கிக் கொள்ள உங்களுக்கு அனுமதி கொடுக்கமாட்டோம். வேறு எந்த ஜில்லாவில் வேண்டுமானாலும் 50 மூட்டை வரைக்கும் வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று எழுதியிருக்கிறார். அதிகமாக விளைந்துள்ள ஊரில் நெல்லும் அரிசியும் மக்கிப் புழுப் புழுக்கவேண்டுமாம்! பற்றாக்குறை ஜில்லாவில் மேலும் அரிசி வாங்கி மேலும் அந்த ஊரில் பஞ்சத்தை அதிகமாக்க வேண்டுமாம்!

அறிவற்றமுறையிலா ஆட்சிநடப்பது?

சுயராஜ்ய சர்க்காரின் புத்திசாலித்தனத்திற்கு இதைவிடச் சான்று ஒன்று வேண்டுமா? இவ்வளவு கவலையற்ற முறையில், அறிவற்ற முறையிலா, சுயராஜ்ய ஆட்சி நடப்பது? சுயராஜ்ய ஆட்சியில் கள்ளமார்க்கட் கொள்ளைக்கும் லஞ்சத்திற்கும் ஒரு அளவையே காணோம்! பணத்திற்கு மிஞ்சியமோகினியைக்காண முடியவில்லையே? எதையும் பணம் கொடுத்து சாதித்துக் கொள்ள முடிகிறதே! மந்திரிகளே பணக்காரன் காலடியில் வீழ்ந்து கிடக்கிறார்களே! பணக்கார முதலாளிகளுக்குச் சாதகமாகத்தொழிலாளர்களுக்குக் கூடுமான அளவுக்குத் தொல்லை கொடுக்கிறார்களே!

இந்தக் குறைபாடுகளை எடுத்துக் கூறுவதுகூட குற்றமாகக் கருதப்படுமானால், ஆட்சி என்று ஒன்று ஏன் இருக்கவேண்டும்? நேற்று முளைத்த காளான்கள் தானே நீங்கள்? தன்மையை நீங்கள் அறியாமற் போனதேனோ? காளான்கள் வெயிலில் கருகிப் போகும். மழை பெய்தால் துளிர்க்கும். அதுபோல் இந்த சுயராஜ்ஜிய காலம் உங்களுக்கு மழைக்காலமாயிருக்கிறது. நீங்கள் துள்ளிக் குதிக்கிறீர்கள். நாளை மக்கள் அறிவு பெற்றெழுவார்களானால் (வெயிற்காலம் வருமானால்) நீங்கள் காளான்களைப் போல் கருக வேண்டியவர்கள்தானே? இதைச் சிந்திக்க வேண்டாமா நீங்கள்? ஒரு காமராஜரோ, ஒரு வைத்தியநாதய்யரோ, ஒரு டாக்டர் ராஜனோ எங்களைவிட எப்படி எந்தக்காரியத்தில் தகுதி பெற்றவர்கள்?

பெருமையடிக்கிறீர்களே! பெருமை பிழைக்க வழியுண்டா?

நாங்கள் நம்பிக்கைக் குறைவாக நடந்து கொண்டதாக ஒரு உதாரணமாவது உங்களால் காட்டமுடியுமா? உங்களிடம் பண்டிதர்களும் பி. ஏ.க்களும் எம். ஏ க்களும் இருக்கிறார்கள் என்று வேண்டுமானால் நீங்கள் பெருமையடித்துக் கொள்ளலாம். என்றாலும் நேற்றுப் பள்ளியைவிட்டு வந்து எங்கள் கழகத்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

சட்டமறுப்புச் செய்வது சண்டித்தனம், முட்டாள்தனம்!

★

தில் சேர்ந்து ஒரு 10 நாளைக்குக் கருப்புச் சட்டை போட்டுக் கொண்டிருந்த மாணாக்கன் ஒருவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லையே, உங்களால்! அவன் கூறுவானே பதில் நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும். உங்கள் பெரிய பெரிய தலைவர்கள் பேச வந்தால் கூட ஒரு 2, 3 ஆயிரம் பேரைக்கூட்ட முடியவில்லையே! எங்கள் கழக மாணவன் ஒருவன் பேசுவதாயினும் கூட ஆயிரக்கணக்கில் கூட்டம்சேர்ந்து விடுகிறதே. ஒருகருப்புச்சட்டைக்காரனைத் தொலைவில் பார்த்தால்கூட உங்கள் தலைவர்கள் கூட்டத்தை முடித்துக் கொண்டு ஓடிவிடுகிறார்களே! இதன் அர்த்தமென்ன? வரப்போகிற அரசியல் சட்டம் எப்படி இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லக்கூடவா எங்களுக்கு உரிமை இருக்கக் கூடாது. எங்கள் உரிமையை எத்தனைநாள் மறுத்து வர முடியும்? வெடி குண்டை மூடி வைத்தால் எத்தனை நாளைக்கு அது வெடிக்காமல் இருக்கும்? நீங்கள் மூடி வைக்கமுடிவைக்கஎங்களுக்கு எங்கெங்கிருந்தோஆதரவு வந்துகொண்டிருக்கிறதே! மராத்தி தேசத்திலிருந்து ஆதரவு வருகிறது. ஹைதராபாத்திலிருந்து ஆதரவு வருகிறது. இன்னும் எங்கெங்கிருந்தெல்லாமோ ஆதரவு வந்து கொண்டிருக்கிறதே! திராவிட நாட்டுப் பிரிவினைக்கு தம்கழுத்தைக் கொடுக்க எங்கெங்கிருந்தோ மக்கள் வரக்காத்திருக்கிறார்களே! இப்படியிருக்க மக்கள் ஆதரவில்லை என்று எத்தனை நாளைக்கு எங்கள்கோரிக்கையைத்தட்டிக்கழித்துக் கொண்டிருக்கப்போகிறாய்?

திட்டமா இல்லை?

எங்கள் கழகத்திற்குத்திட்டமில்லை என்று கூறுகிறாயே! புத்தியிருக்கா உனக்கு? உங்கள் ராஜகோபாலாச்சாரியாருக்கே தெரியுமே; ஜஸ்டிஸ் கட்சித் திட்டம் என்றால் அது எவ்வளவு முற்போக்கானதென்று. ரஷ்யாவுக்குக் கூட நாங்கள் திட்டம் போட்டுக் கொடுப்போமே! நாங்களொன்றும் புத்தகப் பூச்சிகளல்லவே, கம்யூனிஸ்டுகளைப்போல் புத்தகங்களைப் பார்த்து திட்டம்போட; எங்கள் திட்டம் இந்த உலகத்திற்குமட்டுமல்ல; மேல்உலகத்திற்குக்கூட போதுமே! என் யோசித்துப் பார்க்காமல் "பெரியார்தான் முக்காலத்திற்கும் தலைவராக இருக்கத் தகுதி வாய்ந்தவர்" என்று ஒருநாள் கூறிவிட்டு, மறுநாளே வேறுவிதமாகப் பேசும் சிலரைப்போல், 'இன்னும் இரண்டு தலைமுறைக்கு வேண்டிய திட்டம் தீட்டித்தந்தாகி விட்டது' என்று ஒருநாள் கூறிவிட்டு மறுநாளே 'திட்டமேது' என்று கூறும் சிலரைப் போல் விதண்டாவாதம் பேசுகிறீர்கள்.

கொழும்பு நகரத்தில் ஒரு பெரிய தோட்டமிருக்கிறது. அங்கு ஒரு விளம்பரப் பலகையில் "இந்த தோட்டத்தில் இல்லாத ஏதாவதொரு செடியின் பெயரைக் கூறிவிட்டால் அவருக்கு 100 ரூ பரிசாக அளிக்கப்படும்" என்று எழுதியிருக்கிறது. அதேபோல் நான் 100 அல்ல; 500 ரூபாய் தருகிறேன். ஏதோ குறிப்பிட்டுக்காட்டுங்கள் எங்கள் கழகத்தில் இல்லாத ஒரு திட்டத்தை. தனி உடைமையா, பொது உடைமையா, சமதர்மமா? எதற்கு எங்களிடம் திட்டமில்லை, என்று கூற முடியும் உன்னால். கம்யூனிஸ்ட்டுகள் முதல் போட்ட முதலாளிகளை மட்டுமே திட்டிவிட்டுப் பார்ப்பான்கிளப்பின் ஓசிக் காப்பி வாங்கிச் சாப்பிடுவார்கள். நாங்கள் முதல் போடும் முதலாளிகளைமட்டுமல்லாமல், முதல் போடாத குழவிக் கல்லையும் அதன் பேரால் பிழைக்கும் பூணூல் பார்ப்பன முதலாளியையும் சேர்த்துக் குறைகூறுகிறோம். இதுதானே வித்தியாசம்? அடுத்த 50 வருடத்திற்கு ஆகக்கூடிய திட்டமுண்டு தம்பி எங்களிடம்.

எப்பொழுது நமது போராட்டம்?

எங்களிடம் உடனடியாகப் போராட்டம் நடத்துவதற்கான திட்டம் ஒன்றும் இல்லை என்று வேண்டுமானால் கூறலாம். போராட்டம் வேண்டும் என்பதற்காகவே ஒரு போராட்டத்தை நடத்துவதா? ஏதாவது ஒரு லட்சியம் வெற்றி பெறுவதற்காக போராட்டம் நடத்துவதா? நீயே சிந்தித்துப்பார். மக்களிடம் பதவி கூடிகேட்கவோ, அல்லது நற்சாட்சிப் பத்திரம் பெறவோ அல்ல, போராட்டம் நடத்தப்பட வேண்டியது.

போராட்டம்நாம்நடத்துவோமானால் போராட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே நமது லட்சியமும் நிறைவேறிக் கொண்டு வரவேண்டும். அப்படிப்பட்ட தறுவாயில் தான் நமது போராட்டமும் துவங்கும்.

சட்ட மறுப்புச் செய்வதென்பது முட்டாள்தனம், சண்டித்தனம். அதனால்தான் சட்ட மறுப்பு சட்ட மறுப்பு என்று பஜனை செய்தவர்கள் இன்று சட்டம் செய்ய முடியாமல் ஓடிஒளிந்து கொள்கிறார்கள்.

ஆகஸ்ட் கலவரக் கவர்னரும் அருமைச் சுயராஜ்ஜிய மந்திரிகளும்.

ஆகஸ்ட் கலவர காலத்தில், அதாவது தந்திக்கம்பி அறுக்கப்பட்டு தபாலாபீஸ் கொளுத்தப்பட்ட அந்தக் காலத்தில்,ஒரு கவர்னர், டாப்இல்லாத காரில் நடுத்தெருவில் சவாரி செய்து கொண்டிருந்தான் பயமின்றி. ஆனால் அக்காலத்தில் சட்ட மறுப்பு சட்ட மறுப்பு என்று கூறிக் கொண்டிருந்தவர்களோ இந்தச் சுயராஜ்ஜிய காலத்தில் மந்திரிகளாகியும்கூட வெளியில் தனித்துச் செல்லப் பயப்படுகிறார்கள். இந்தியாவின் முதன் மந்திரியார் முள்வேலிக்குள் அடைபட்டுக்கிடக்கிறார். எங்கும் சுதந்தரமாகப்போக முடியவில்லையே என்று பிரலாபிக்கிறார். ஏன் இந்த நிலை? ஜெயிலை விட்டு வெளிவந்த பிறகு ஆகஸ்ட் கலவரக் காரணஸ்தர்களுக்கு நன்றி தெரிவிக்காதிருந்தால், அவர்களுடைய அக்கிரமம் நாச வேலையைக் கண்டித்திருந்தால் நாட்டில் இவ்வளவு அக்கிரமம் தாண்டவம் ஆடுமா? தோழர்களே நாட்டில் தங்கு தடையின்றி வளர்ந்து வரும் இக்காலித்தனத்திற்கு இடங்கொடாமல் அதை அடக்கி வருவதுதான் எங்கள் முதல் வேலை. ஆகஸ்ட் கலவரத்தின் போது செத்தவர்கள், கஷ்டப்பட்டவர்கள், பொருளிழந்தவர்கள் நம்மவர்கள்தான். ஆனால் இன்று பயனும் பெருமையும் அடைந்தவர்களோ, அக்கிரகாரச் சோம்பேறிகள்தான்.

பாடுபட உரிமை, ஆனால்பயனை அநுபவிக்க இல்லை.

இதை நீங்கள் நன்றாக மனதில் இருத்த வேண்டும். பாடுபடத்தான் ஆரிய தர்மப்படி நமக்கு உரிமையுண்டே ஒழிய, பாடுபட்டதின் பயனை அனுபவிக்க நமக்கு உரிமை இல்லை என்பதைக் காங்கரஸ் திராவிடத் தோழர்கள் உணரவேண்டும். ஒரு இராமசாமி ரெட்டியாரோ, ஒரு காமராஜரோ, ஒரு குப்புசாமி முதலியாரோ, ஒரு அண்ணாமலைப் பிள்ளையோ என்னதான் நமக்குத் துரோகம் செய்தாலும் அவர்கள் நம்மவர்கள், அவர்களும் திராவிடர்கள் என்பதை நம்மால் மறந்துவிடக் கூடுமா? அவர்கள் மீது நம் கழகத் திராவிடர்களை ஏவிவிடுவது முறையாகுமா? அன்னக்காவடிப் பார்ப்பனர்கள் நாட்டில் காலித்தனம் வளர இடம் கொடுக்கிறார்கள் என்பதற்காக ஆண்ட இனத்தவரான நாமும் காலித்தனத்தைக் கற்பித்துக் கொடுப்பதா?

நம் நாடு இது! பொறுப்பும் நமதே!

அவர்களைவிட நமக்குத்தான் பொறுப்பு அதிகம். ஏனெனில் இது நம்முடைய நாடு. இதில் வாழ்பவர்கள் 100க்கு 97 பேர் நம்மவர்கள், ஆகவே

இப்படி நீங்கள் வெளிவரவேண்டும் இதற்குத்தானே பொறுத்திருந்தோம்.

நாம் தான்மக்களுக்கு ஒழுக்கத்தையும் யோக்கியதையையும் கட்டுப்பாட்டையும் கற்பித்துக் கொடுக்கவேண்டியவர்கள். பார்ப்பனர் இந்நாட்டிற்குப் பிச்சையெடுக்க வந்தவர்களாகையால் இந்நாட்டைப்பற்றியோ, இந்நாட்டு மக்களைப்பற்றியோ அவர்களுக்குக் கவலை கிடையாது. ஆகவே அவர்களைக் கண்டு நீங்கள் ஆத்திரப்பட்டு விடக்கூடாது. ஆராய்ந்து தெளியவேண்டும் நீங்கள். பார்ப்பனர் திராவிடர் போராட்டம் ரொம்பவும் வளர்ந்து விட்டது. பார்ப்பனர்களும் துணிந்து விட்டார்கள். துணியக் காரணமும் இல்லாமல் இல்லை.

பார்ப்பனர் போருக்கு அழைக்கக் காரணம் என்ன?

இன்று ஆட்சி இவர்கள் ஆதிக்கத்தில் இருக்கிறது. அநேகமாக இவர்கள் ஆதிக்கத்திற்கு இதுவே கடைசிக் காலமாகவும் இருக்கக்கூடும். இன்று தவறின் நாளை ஆட்சி யார் கைக்குச் செல்லுமோ என்று அஞ்சுகிறார்கள். ஆகவே ஆட்சி தம் ஆதிக்கத்தில் உள்ள போதே நம்மீது பாய்ந்து தம் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ள நினைக்கிறார்கள். "கருப்பு நாய் வெள்ளை நாய் ஆகாது. கழுதை குதிரையாகாது. ஆண் பெண்ணாக மாற முடியாது. பெண் ஆணாக மாற முடியாது. இவை எப்படி ஆண்டவன் படைப்போ அதே போல் ஆண்டவனால் பார்ப்பானாகப் பிறக்கப்பட்டவன் பார்ப்பானாகத்தான் இருப்பான், ஆண்டவனால் சூத்திரனாகப் பிறக்கப்பட்டவன் சூத்திரனாகத்தான் இருப்பான், இவைகள் மாற்ற முடியாதவைகள்", என்று கூறியிருக்கிறார்கள். திவான்பகதூர் ராமசாமி சாஸ்திரியார், எம். எஸ். சுப்ரமணிய அய்யர் ஆகியோர் கூடி இனி இரண்டிலொன்று பார்த்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள். புல்லேந்திய கைவாளேந்தும்; பலமுறை வாளேந்திப் பலரைக் கொலை செய்திருக்கிறோம். பலரை அண்டியிருந்து கெடுத்திருக்கிறோம்" என்று கூறி மேலும் மார்தட்டிக் கூறுகிறார்கள். சிப்பாய்க் கலகத்தை நடத்தியவர் யார் தெரியுமா? ராணா என்கிற ஒரு பார்ப்பான். ஞாபகமிருக்கட்டும். இதுமட்டுமா? திருநெல்வேலியில் ஆஷ் துரையைச்சுட முன்வந்தவன்யார் தெரியுமா—வாஞ்சி என்கிற ஒரு பார்ப்பனன்—என்று கூறிவிட்டு இதுமட்டுமா—உலகமே போற்றிய உத்தமர் காந்தியாரைச் சுட்டுக் கொன்றது யார் தெரியுமா—கோட்ஸே என்கிற ஒரு பார்ப்பான் என்பது ஞாபகம் இருக்கட்டும் என்று கூறாமல், குறிப்பு மட்டும் காட்டியிருக்கிறார்கள். துப்பாக்கி எடுக்குமளவு துணிந்து நம்மைப்போருக்கழைக்கிறார்கள்.

நாம் அஞ்சாமல் எதிர்த்து நிற்போம். அவர்கள் பேச்சுப்படி முன்வரட்டும்!

இது பஞ்சாங்கக் காலமா?

அதற்கு முன் சற்று அந்த அய்யர் கூறியிருப்பதை அலசிப்பார்ப்போம். ஆணைப் ,பெண்ணாக்க முடியாது பெண்ணை ஆணாக்க முடியாது என்கிறார். அய்யோ பாவம்! இன்னும் இந்த அய்யன் பஞ்சாங்கக் காலத்திலேயே இருக்கிறார். மேனாட்டு அறிஞர்கள் இதற்கும் வழிகண்டுபிடித்து விட்டார்கள் என்பதையும், ஒரு பெண் ஆணாக்கப்பட்டு விட்டார்என்பதையும், இயற்கையாகவே சேவல் பெட்டையாவதும் பெட்டை சேவலாவதும் சகஜமாகவே இருந்து வருகிறது என்பதையும் இவர் அறிந்து கொள்ளவேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, "பார்ப்பானும் சூத்திரனும் கடவுள் படைப்பு" என்பது. ஆகவே இவ்வேற்றுமை மாற்றக்கூடாதது, மாற்ற முடியாதது என்கிறார். இந்தப் பார்ப்பானைப் படைத்த கடவுள் தானே என்னையும் படைத்திருக்க வேண்டும்? அந்தக் கடவுள் அநுமதியில்லாமலா பார்ப்பானை ஒழிப்பதுதான் சூத்திரனை ஒழிப்பதுதான் என்வேலை என்று கூறிக்கொண்டு அதையொட்டி பிரச்சாரம் செய்து வருவேன்? நான் மட்டும் எப்படிக் கடவுள் ஆக்கினைக்குப் புறம்பாக நடக்க முடியும்? அப்படியிருக்கும்போது அவரண்டையே போய் முட்டிக்கேளேன். "ஆண்டவனே, அந்தணனையும் படைத்து அவனை ஒழிக்க ஒரு இராமசாமி நாய்க்கனையும் ஏன் படைத்தாய்" என்று! உன்மண்டையில் இருப்பது மூளையா? களிமண்ணா? மூளையாயிருந்தால் இதை உன்னால் உணர்ந்துகொள்ளாதிருந்திருக்க முடியுமா.

அடுக்குமா இந்த ஆணவம்?

இதுவரை பல கஷ்டங்களுக்கிடையேயும் இந்தத் தூத்துக்குடியில் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் பேர் கூடியிருக்கிறோம். என்றாலும் ஒரு பார்ப்பனப் பத்திரிக்கையாவது ஒரு வரி எழுதுமா இங்கு நடக்கும் நடவடிக்கை பற்றி? ஏதாவது, ஒரு சின்னக் கலவரம்இங்கல்ல; தூத்துக்குடிக்கடைத்தெருவில் நடந்து விட்டும். கொட்டை எழுத்தில் எல்லாப் பார்ப்பனப்பத்திரிக்கைகளும்தூத்துக்குடிக் கடைத் தெருவில் கருப்புச் சட்டையினர் கலாட்டா, என்று பிரசுரிக்கின்றனவா இல்லையா பாருங்கள்! அவ்வளவு கட்டுப்பாடாக நம் சங்கதியை மறைக்கின்றன. எங்கோசென்னை ரஸிகரஞ்சனி சபாவில் $3\frac{3}{4}$ பார்ப்பனர்கள் கூடினார்கள் என்றால் அது பற்றி ஒவ்வொரு பார்ப்பனப் பத்திரிகையிலும் ஒரு பக்கம் சேதி வருகிறதே! இந்த அக்கிரமத்தைப் பற்றிக் கேட்க ஆளுண்டா! இவ்வளவு அக்கிரமம் நீங்கள் செய்து கொண்டு, "புல்லேந்தும் கை வாளேந்தும்" என்று கூறுகிறீர்களே, அடுக்குமா, இந்த ஆணவம், உங்களுக்கு?

வாங்கோ! தம்பிகளே வெளியில். இப்படி நீங்கள் நேரில் வெளிவர வேண்டும் என்றுதானே இவ்வளவு காலம் பொறுத்திருந்தோம். எவ்வளவு சீக்கிரம் வெளிவருகிறீர்களோ, அவ்வளவு சீக்கிரம் எங்களுக்கு நலமாயிற்றே! அவ்வளவு சீக்கிரத்தில் எங்களது இழிவும் ஒழிந்து போகுமே! நீங்கள் இருப்பது 100க்கு3பேர். நாங்கள் இருப்பது 100க்கு 97 பேர். எங்களில் ஒரு ஆள் உங்களில் ஒரு ஆளைக்கூடவா வெற்றி கொள்ள மாட்டான்? நாங்கள் 97க்கு 3பேர் அழிந்தால் பரவாயில்லை. மிச்சம் இருக்கும் 94 பேராவது இழிவு நீங்கி மனிதர்களாய் வாழ்வார்கள். உங்களில் 3க்கு 3பேர் மாண்டால் அப்புறம் சைபர் தான் இருக்கும். புல்லேந்தியவர் வாளேந்தினால் வாளேந்தியவர் என்ன ஏந்துவார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். விரல் உரல் ஆனால் உரல்என்ன ஆகும். அப்புறம் உங்கள் கதி என்னவாகும்? என்பதையும் நினைத்துப்பாருங்கள்.

அநுதினமும் பார்ப்பனர்கள் தான் திராவிடர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்களே ஒழிய, திராவிடர்களல்ல பார்ப்பனர்களுக்குத் தொல்லைகொடுத்து வருவது என்பதை எல்லா மக்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். பார்ப்பனர்கள் வாழையிலைகள். திராவிடர்கள் முட் செடிகள். வாழையிலைமுள்ளின்மீதுமோதினாலும் முள்வாழை மீதுமோதினாலும் வாழையிலை தான் அழிந்து விடும். அதுபோல்பார்ப்பனர்கள்திராவிடர்கள் மீது மோதினால் தாம் தான் அழிவார்கள். திராவிடர்கள் பார்ப்பனர்களை மோத ஆரம்பித்தார்களோ அப்புறம் பார்ப்பனப் பூண்டே இந்நாட்டில் இருக்காது. இதைப் பார்ப்பனர்கள் உணரவேண்டும். (தொடரும்)

[2ம் பக்கத் தொடர்ச்சி]

டிய வசதிகளை அணுசக்தியால் அடைகின்றனர். அணுச்சக்தியால் சீதோஷ்ண நிலையைச் செம்மைப் படுத்த முயற்சிக்கின்றனர். இந்த முறையில் செல்கிறது மற்றைய நாடுகளின் ஆராய்ச்சியும்—ஆக்க வேலைகளும். அணுச்சக்தியின் அதிசயத்தைக் கண்டு உலகம் போற்றும் இந்நாளில் அரிகதா காலட்சேபம் கேட்க ஆயிரக்கணக்கில் நாம் திரண்டு செல்லுகிறோம். அணுச்சக்தியைவிட அதிசயம் தான் நம் நாட்டின் அரிகதா காலட்சேபம்! பல மனைவியரைக் கொண்ட பாலகோபாலனின் மாயா லீலைகளையும், மங்கையர்களின் மீது நாட்டத்தைச் செலுத்தும் ஒரு சிருட்டியை மண்ணுலக மக்களுக்குக் கடவுளாகக் காட்டி வாழ்ந்து வரும் சில சோம்பேறிக் கும்பல்களின் பிதற்றல்களையும் அணுச்சக்தியால் ஆக்கமுடியுமா?

நம்பத்தகாதவைகளை யெல்லாம் நம்மிடம் கூறி நாசப்படுத்தி விட்டனர். பாமரப் பெண்களுக்குப் படிப்பு வசதி ஏற்பட்டு விட்டால் பல நாட்டு மக்களின் சீர்திருத்த வாழ்க்கையைப் படித்தறிந்தார்களானால், பண்பட்டுவிடும் நம்மவர்கள் உள்ளம். எதையும் சிந்திக்கும் ஆற்றல் பெற்றுவிட்டோமானால், நாம் இருக்கும் இழி நிலையும் நம் சிந்தனைக் கெட்டாமற் போகாது. சீர்குலைந்த நம் வாழ்வை மாற்றி அமைக்கத் துடிதுடிக்கும் நம் உள்ளம்.

ருஷ்யப் பெண்களைப்போல் நாம் நல்வாழ்வு வாழ வேண்டாமா? வாழப்பிறந்தவர்களல்லவா என்று கொந்தளித்துக் குமுற ஆரம்பிக்கும் நம் உள்ளம். முடிவில் நம் உள்ளக் குமுறல் எரிமலையைப்போல் என்றைக்காவது வெடித்துத்தான் தீரும்.

இருந்தாலும் அவர்களைப்போல் நீங்கள் வாழப் பிறந்தவர்களல்ல, 'விதி'யின் சதி என்று கூறி ஏய்ப்பனர் நம்மை. எதற்கும் இடம் கொடாதீர்கள்! அன்று ருஷ்யப் பெண்களின் அடிமையைப் போக்க லெனின் தோன்றினார். இன்று திராவிடப் பெண்களின் அடிமையையும், இழி நிலையையும்—சூத்திரப் பட்டத்தையும் போக்க நம் நாட்டு லெனின், (ஈரோட்டுப் பெரியார்) ஏற்பட்டுள்ளார். ஒன்றுபட்டால் எதையும் சாதிக்கலாம். ஆண்களின் மத்தியில் சமத்துவமாக வாழலாம்.

நம்மிடம் சக்தி இல்லையா? காணாத கைலாயத்தின் மீது மோகங்கொண்டு, கற்பனைக்கெட்டாத பலவற்றின் மீது நம்பிக்கை வைத்து அழிந்தோம். அதே நம்பிக்கையை—உறுதியை நம் வாழ்க்கையின் மறு மலர்ச்சிக்காகச் செலவிடுவோம். நம் மனத்தில் நிரப்பப்பட்டுள்ள அர்த்த மற்ற கொள்கைகளுக்கு சீட்டுக்கொடுத்து விட்டு அகப்புரட்சி அடைந்தோமானால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

அதற்காக ஒரு சோதனை நாள் நிச்சயம் ஏற்படும். அன்று, 'வாழ்வு இன்றேல் சாவு' என்ற பிரதிக்கினை எடுத்துக் கொள்ளுங்கள். சிறை—தடியடி—மரணம் அனைத்தையும் ஏற்கும் அளவுக்கு மனதைப் புரட்சிப் பாதையில் திருத்தி அமைப்போமாக!

வாழ்க திராவிடம்! ஒழிக பெண்ணடிமை!

நாதன் கம்பெனி லிமிடெட்.

★

புத்தக விலைப் பட்டியல்.

கவிஞர் பாரதிதாசன்.

பாரதிதாசன் கவிதைகள்	3	8	0
எதிர்பாராத முத்தம்	1	4	0
சௌமியன்	1	4	0
அழகின் சிரிப்பு	1	0	0
தமிழ் இயக்கம்	1	0	0
காதல் நினைவுகள்	0	12	0
இசையமுது	0	12	0
முல்லை காடு	0	12	0
நல்லதீர்ப்பு	0	10	0
குடும்பவிளக்கு I	0	10	0
,, II	0	6	0
அமைதி	0	8	0

இதர வெளியீடுகள்.

லெனின் பிறந்தார்	3	8	0
இனி நாம் செய்யவேண்டியது யாது?	3	0	0
இந்திய சிறு கதைகள்	2	8	0
அய்ந்தாவது சுதந்திரம்	1	8	0
பொய்யும் மெய்யும்	1	8	0
நானூ. கதைகள்	1	8	0
ஆகஸ்டு-15	1	0	0
கோகிலராணி (நாடகம்)	1	0	0
பணம் பிடுங்கிப் பார்ப்பனர்	0	14	0
புரட்சி முரசு	0	12	0
அய்க்கிய திராவிடம்	0	12	0
கனவில் கண்ட கவி	0	10	0
மறுமலர்ச்சி கவிதைகள்	0	8	0
தன்மதிப்புப் பாடல்கள்	0	8	0
நாம் யார்?	0	8	0
அடியுங்கள் சாவுமணி	0	8	0
சாவோலை	0	8	0
ஈட்டிமுனை	0	8	0
இதோ! பெரியாரில் பெரியார் (அழகிரிசாமி சொற்பொழிவு)	0	6	0
பலிபீடம் நோக்கி	0	6	0
ஆரியப் புல்லுருவி	0	6	0
கோவில்களை மூடுங்கள்	0	6	0
நாடகக் கலையின் முன்னேற்றம்	0	6	0
திராவிடமும் ஆரியமும்	0	5	0
வாழ்க திராவிடம்	0	4	0
தீண்டாமையும் இந்துமதமும்	0	4	0
மகள் ஆட்சி	0	4	0
சினிமாவில் கடவுள்கள்	0	4	0
ஓடிப்போனவள் கதை	0	4	0
ஈ. வெ. ரா. உலகப் பெரியார்	0	3	0
திராவிடநாடு பிரிவினை	0	2	0

அறிஞர் அண்ணாதுரை.

ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம்	1	8	0
குமரிக்கோட்டம்	1	0	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
விடுதலைப்போர்	1	0	0
கற்பனைச்சித்திரம்	1	0	0
சிறு கதைகள்	1	0	0
திராவிடர் நிலை	0	6	0
ஏ தாழ்ந்த தமிழகமே	0	8	0
ஆரியமாயை	1	0	0
நல்ல தீர்ப்பு	0	4	0
நாடும் ஏடும்	0	6	0
மே தினமும் திராவிடர் கழகமும்	0	5	0

கிடைக்குமிடம்:-

கச்சேரி வீதி, ஈரோடு.

94 C. பிராட்வே, சென்னை.

மக்கள்
மாக்கள் ஆவது ஏன்?
மதப்பிரச்சாரம்
இருப்பதால் தான்!

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE